பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 27 திங்கட்கிழமை 10.04.2023 கதிர்151

## மீளவும் நாளை கூடுகிறது தேர்தல்கள் ஆணைக்குழு

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திகதி தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காகத் தேர்தல்கள் ஆணைக் குழு நாளை (11) கூடவுள்ளது.

தேர்தலை நடத்துவதற்கு அதிகாரிகளிடம் தொடர்ந்து பணம் கோரியதற்கு உரிய பதில் இதுவரை கிடைக்க வில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்குப் பதில் கிடைக்கவில்லை என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த வாரம் பிரதமருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைஏப்ரல்25ஆம்திகதி நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (02)

### உயிர்த்த ஞாயிறு தினத்தில்

## தாக்குதல் நடந்து 4 ஆண்டுகளாகியும் நீதி நிலைநாட்டப்படவேயில்லை

### பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடைபெற்று நான்கு ஆண்டுகளாகின்றபோதும் இதுவரையில் நீதி நிலைநாட்டவில்லை என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தின் விசேட ஆராதனை கொழும்பு லூசியாஸ் தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றிய பேராயர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது உலகம் நுகர்வுவாதத்திற்கு அடிமைப்பட்டுள்ளது. அனைவரும் அரசியல் அதிகாரத்தினை அனுபவிப்பதற்கே நினைக்கின்றார்கள். அரசியல் அதிகாரத்தினை யாரும் கைவிடுவதற்கு விரும்பவில்லை.

அரசியல்வாதிகள் அதிகாரத்தின் பின்னால் தொங்கிக் கொண்டுள்ளார்கள். அவர்கள் அரசியல் அதிகாரத்தினை தம் வசம் வைத்துக்கொள்ள முனைகின்றனர்.

அதுமட்டுமன்றி அதிகாரங்களை அதிகரித்துக்கொள்வதற்காக அங்குமிங்கும் தாவுவதற்கு முற்படுகின்றனர். அரசியல் கொள்கைகளுக்கு அமைவாக எந்தவிதமான செயற்பாடுகளும் இடம்பெறவில்லை.

அனைத்துச்செயற்பாடுகளும்

## இது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போதைய நாடாளுமன்றத்தில் சொந்தக் கட்சி உறுப்பினர் என்று இருப்பது ஒரேயொரு உறுப்பினர்தான். அதுவும் தேசியப்பட்டியல் மூலம் கிடைத்த ஆசனம். கடந்த பொதுத் தேர்தலில் அந்தக் கட்சிக்கு ஒரு ஆசனத்தைக்கூட வழங்குவதற்கு மக்கள் தயாராக இருக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகள் ஒட்டுமொத்தமாக சஜித் அணியினருக்கே கிடைத்தது. அதற்கு முன்னர் நடந்த தேர்தல்களிலும் ரணில் தொடர்ச்சியாகத் தோல்வியடைந்து வந்தமையே ஐக்கிய தேசியக் கட்சியைவிட்டு விலகி சஜித் தலைமையில் எல்லோரும தனி அணி காண்பதற்கான வழியை ஏற்படுத்தியது. தோல்வியடைந்தது மட்டுமல்ல, அதற்குப் பொறுப்பேற்று இளம் தலைமுறைக்கு வழிவிட்டு அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொள்ளும் பண்பு, நாகரிக்கம் ரணிலிடம் இருக்கவில்லை. அதுவும் ☞2

## 5 நாட்களில் 25 பேர் விபத்துகளில் சாவு

நாட்டில் கடந்த 5 நாட்களில் மாத்திரம் 25 பேர் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 5 நாட்களில் 270 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன என்றும், மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (02)

## செட்டிகுளத்தில் திடீ புத்தர் சிலை

வவுனியா, செட்டிகுளத்தில் தமிழ் மக்கள் வாழும் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மதியம் திடீரென புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம் - மன்னார் வீதியில், செட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பழையதொடருந்துநிலையம் முன்பாக வீதியோரத்தில் சீமெந்து கற்களை அடுக்கி சுமார் ஒன்றரை அடி உயரமுடைய புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. குறித்த இடத்திற்கு வந்த சிலர் கற்களை அடுக்கி புத்தர் சிலையை வைத்து விட்டு அங்கிருந்து சென்றனர் எனன்று தெரியவருகின்றது.

தமிழ்மக்கள்பூர்வீகமாக வாழ்ந்து வரும் அந்த இடத்தில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அந்த இடத்திற்கு அண்மையில் செட்டிகுளம்முருகன்கோவில் அமைந்து.

# வெடுக்குநாறி நிர்வாகத்துடன் இந்திய தூதரகம் இன்று பேச்சு

### ஆலய அழிப்பு தொடர்பில் ஆராய்வு

**ந.லோகதயாளன்.**

**நெடுங்கேணியில் இடித்து அழிக்கப்பட்ட வெடுக்குநாறி ஆதிலிங்க ஆலய நிர்வாகத்தினரை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் இன்று மாலை சந்திக்கின்றார்.**

**வெடுக்குதாறி ஆலய நிர்வாகம் முன்வைத்த கோரிக்கையின் பெயரில் இந்தச் சந்திப்பு இடம்பெறுகின்றது.**

**கொழும்பில் இடம்பெறும் இச் சந்திப்பிற்காக வெடுக்குநாறி ஆலயத்தை சேர்ந்த மூவர் இன்று காலை கொழும்பு பயணிக்கின்றனர்.**

**வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் அழுக்கப்பட்ட சமயம் கடந்த 2ஆம் திகதி அவை மீண்டும் பிரதிஸ்டை செய்யப்படும் என அமைச்சர்களான டக்ளஸ் தேவானாந்தாவும் ஜீவன் தொண்டமானும. வாக்குறுதி அளித்தபோதும் அதனை நிறைவேற்றாது ஏமாற்றியதன் விளைவாக ஆலய நிர்வாகம் இதனை இந்திய தூதரகம் மற்றும் இந்து அமைப்புக்கள் ஊடாக பாரதப் பிரதமரின் கவனத்திற்கும் கொண்டு சென்றனர்.**

**இவற்றின் அடிப்படையில் ஆலய வரலாறு, தறபோதைய வழக்கு நிலவரங்கள், இடையூறுகள் தொடர்பாக கேட்டறியும் நோக்கில் இன்று மாலை 4.30ற்கு இச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.**

## அரகலய தியாகிகள் நினைவுகூரல் நேற்று

காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட அரகலய போராட்டத்தின் போது உயிரிழந்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை நினைவுகூரப்பட்டார்கள்.

காலி முகத்திடல் போராட்டம் தொடங்கப்பட்டு ஒருவருடம் நிறைவடைந்ததை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில், சர்வமத தலைவர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

நினைவுகூரலின் போதுசர்வமத பிரார்த்தனைகள் இடம்பெற்றதோடு, உயிரிழந்த ☞2

## கச்சதீவை வழங்க மீனவர் பிரதிநிதி கடும் எதிர்ப்பு

கச்சதீவினை மீளப்பெறுவதை நாம் எதிர்க்கின்றோம் என்று யாழ்.மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயகத்தின் தலைவர் இரட்ணசிங்கம் முரளிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர்

## ஹரக் கட்டாவுடன் தொடர்புடைய கான்ஸ்டபிள் உட்பட 2 பேர் கைது

ஹரக் கட்டா எனப்படும் போதைப்பொருள் கடத்தல்காரர் நடுன் சிந்தக விக்கிரமரத்னவின் போதைப்பொருள் வலையமைப்புடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ்விசேடஅதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் மேல் மாகாண புலனாய்வுப் பிரிவுக்குட்பட்ட மிரிஹான உப பிரிவில் கடமையாற்றி வருகின்றார்.

கான்ஸ்டபிளுடன் கைது செய்யப்பட்ட மற்றைய சந்தேகநபர், 74 கிராம் ஐஸ் போதைப்பொருளைக் கடத்தப் பயன்படுத்திய கார் ஒன்றும், இரண்டு கையடக்கத் தொலைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இருவரும் குறித்த காரில் பயணித்த வேளை கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (02)

## வடக்கு மாகாண ஆளுநர் அடாவடித்தனம் செய்கிறார்

### அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு

எஸ்.நிதர்ஷன்

வடக்கு மாகாண ஆளுநர் அடாவடித்தனமாக அச்சுறுத்தல் பாணியிலேயே செயல்படுகிறார் என்று வடக்கு மாகாண அவைத் தலைவரும் தமிழரசுக் கட்சியின் துணைத் தலைவருமான சீ.வீ.கே சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையிலுள்ள மாகாண சபைகளின் தேர்தல் நடத்ததப்படாததால் ஆளுநரிற்கு அதிகாரங்கள் சென்றிருக்கின்ற நிலையில் எதேச்சதிகாரமான செயற்பாடுகள் நிறையவே தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வடக்கு மாகாண ஆளுநரை எடுத்துக் கொண்டால் தனக்கு இல்லாத அதிகாரங்கள் உட்பட எல்லா அதிகாரங்களும் தனக்குத்தான் இருக்கிறது என்பது போல செயற்படுகிற நிலையைக் காண்கிறோம்.

மாகாண சபைகள் மற்றும்உள்ளூராட்சிசபைகள் இல்லாததால் ஆளுநரும் அதிகாரிகளும் தங்களது அதிகாரங்களுக்கு அப்பால் சென்று செயற்படுகின்ற நிலையும் காணப்படுகிறது.

அதிலும் வடக்கு ☞2

## கச்சதீவை மீட்டெடுக்க ஸ்டாலின் வலியுறுத்து

### பிரதமர் மோடிக்கு மனு கையளிப்பு

கச்சதீவை மீட்டெடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் வலியுறுத்தினார்.

தமிழகத்திற்கு 2 நாள் பயணமாக பிரதமர் நரேந்திர மோடி வருகை தந்திருந்த நிலையில் கச்சதீவு, ஈழத்தமிழர்களுக்கான நிரந்தர தீர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றை சென்னை விமான நிலையத்தில் வைத்து முதலமைச்சர் ஸ்டாலின் கையளித்தார்.

அந்த மனுவில், தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையைப் பாதுகாப்பதற் குக் கச்சத்தீவை மீட்டெடுக்கவேண்டும். தமிழ்நாட்டில் ராமநாதபுரம், நாகை, புதுக்கோட்டை, திருவாரூர் மற்றும் தஞ்சை போன்ற மாவட்டங்களில் வாழும் மீனவர்கள் நேரடியாக மீன்பிடித் தொழிலை நம்பியுள்ளனர்.

சர்வதேச எல்லைக்கோட்டினை தாண்டிச் செல்லும் நிகழ்வுகளால் இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துகிறார்கள். இந்த தாக்குதல் இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையேயான உறவுகளை சீர்குலைக்கும். எனவே கச்சதீவை இந்தியாவிற்குத் திரும்பப் பெறவேண்டும்.

அப்போதுதான் பாக்கு நீரினையை மையப் ☞2

## முன்னோக்கிச் செல்லும் இலங்கையை பின்னோக்கி நகர்த்தச் சதி செய்யாதீர்

### அமைச்சர் பந்துல வேண்டுகோள்



'கடந்தவருடஆரம்பத்தில் வீழ்ச்சியடைந்திருந்த இலங்கை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிறந்த நடவடிக்கைகளால் இந்த வருடம் முன்னோக்கிச் செல்கின்றது. இந்நிலையில், எமது நாட்டைப் பின்னோக்கி நகர்த்த எவரும் சதி செய்யக்கூடாது என்று விநயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.'

-இவ்வாறுபோக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.



'நாடு மீதும் மக்கள் மீதும் அக்கறை உள்ளவர்கள் சதி முயற்சிகளுக்குத் துணை போகமாட்டார்கள்' என்றும் அவர் குறிப்பிட்டார்

இந்தியக் கடன் உதவியின் கீழ் இலங்கைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட 26 புதிய பஸ்களை கண்டி மாவட்டத்தில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்களுக்குக் கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

'கடந்த வருடத்தை விட இந்த வருடம் புத்தாண்டு மிகவும் சுபமானதாக அமைந்திருக்கின்றது. அடுத்த வருடத்தை இன்னும் சிறப்பாக மாற்ற வேண்டிய பாரிய பொறுப்பு முழு இலங்கை மக்களுக்கும் இருக்கின்றது' - என்றும் அவர் மேலும் கூறினார். (02)

## உடன் திரும்பப் பெறப்பட்ட இந்திய மயக்க மருந்துகள்

### தரம் தொடர்பில் முறைப்பாடு

நாட்டில் தற்போது வைத்தியசாலைகளில் அறுவைச் சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் மயக்க மருந்துகள் உடன் அமுலாகும் வகையில் பாவனையில் இருந்து மீளப் பெறப்பட்டுள்ளன.

அதன் தரம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மயக்க ஊசிகள் தொடர்பில், நிபுணர்களின் ஒத்துழைப்புடன் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

மூன்று பிரிவுகளின் கீழ் தற்காலிகமாக குறித்த மருந்து பாவனை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த மயக்க மருந்துகள், இந்திய கடன் வசதியின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த நாட்டின் மருந்து நிறுவனம் ஒன்றினால் அவை அனுப்பப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

முறையான முன்பரிசோதனைக்கு பின்னரே இந்த மயக்க மருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதா? என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் உள்ளகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ☞2

காலைக்கதிர் Kalaikkathir

### இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித் அணி பிரிந்து சென்று தனிக்கட்சிதொடங்குவதற்குக் காரணமாக இருந்தது.

இந்த நிலையில் எதிர்பாராத விதமாக ரணிலின் கைகளுக்குஅவர்ஆசைப்பட்ட அதிகாரம் வந்து சேர்ந்தது. அரகலயவின் புரட்சி மூலம் கோட்டாபய ராஜபக்சநாட்டை விட்டுத் தப்பியோட, பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாக ரணிலின் கைகளில் அதிகாரம் வீழ்ந்தது. முதலில் பிரதமராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் அவர் அதிகாரக் கதிரையில் அமர்ந்தார். இப்படி அதிகாரத்தில் அமர்ந்ததும் சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து தன் பக்கம் பலர் ஓடி வருவார்கள் என்று ரணில் எதிர்பார்த்தார். ஆனால் அப்படியெதுவும் நடக்கவில்லை. கரின் பெர்னான்டோ உள்ளிட்ட ஒரு சிலரைத்தான் அமைச்சுப் பதவிகளைக் காட்டி அவரால் தன் பக்கம் ஈர்க்க முடிந்தது.

இதனால் நாடாளுமன்றத்திற்குள் பொது ஜன பெரமுனவின் ஆதரவில் மட்டுமே தங்கியிருக்க வேண்டிய நிலை தொடர்கிறது. தற்போதிருக்கின்றஅரசியலில்நிலமை எப்படி வேண்டுமானாலும் மாறலாம் என்பது ரணிக்குத் தெரியும். அதற்கு முன்னதாக நாடாளுமன்றத்தில் தன்னைப் பலப்படுத்த அவர் விரும்புகின்றார். ஆனால், சஜித் பக்கம் இருப்பவர்களை அவரால்தன்பக்கம்ஈர்தெடுக்க முடியவில்லை. அதனால் தேர்தல் மூலம் தன்னைப் பலப்படுத்திக்கொள்ளும் வியூகங்களை அவர் திட்டமிடுகின்றார். ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் தனக்கு ஆதரவானதொரு நிலையை ஏற்படுத்துவதற்கு அவர் முயற்சிக்கின்றார்.

அந்த முயற்சியிலும் இப்போதைக்கு ராஜபக்சக்களின் ஆதரவின்றி ரணிலால் வெற்றிபெற முடியாது என்பதுதான் யதார்த்தம். ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை வைத்தால் அதில் பொது ஜன பெரமுன தன்னை மட்டும் ஆதரிக்கும் என்கிற நிலை இல்லை, அவர்களிடம் வேறு ஒரு தெரிவும் இருக்கிறது என்று இப்போது ரணிலுக்குத் தெரிகிறது. ராஜபக்ச குடும்பத்திற்குள்ளேயே தன்னை ஆதரிப்பதில் முழுமையயான ஆதரவு கிடைக்காது என்பதும் தெரண ஊடக உரிமையாளர் டிலித்ஜெயவீரவை ஜனாதிபதி வேட்பாளராக்கும் எண்ணம் அங்குஇருக்கின்றது என்பதும் ரணிலுக்குத் தெரியவந்தது.

இந்தப் பின்னணியில் தான் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஆட்களைத் தன்பக்கம் இழுத்தெடுக்கும் முயற்சிகளைஅவர்தொடர்ந்து செய்கிறார். ஒவ்வொரு தடவை ரணில் சவால்களைச் சந்திக்கும்போதும் இந்த முயற்சி நடக்கிறது. கடந்த சில மாதங்களில் மட்டும் ஐக்கியமக்கள்சக்தியிலிருந்து பலர் ஆட்சிப் பக்கம் தாவப் போகிறார்கள் என்கிற செய்தி 6 அல்லது 7 தடவைகள் வெளிவந்திருக்கின்றன. ஆட்சியாளர்களுக்கு ஆதரவான ஊடகங்களில் இந்தச் செய்தி அடிக்கடி வெளியிடப்பட்டுக்கொண்டே இருக்கின்றது. இந்தத்தடவை அதில் உண்மையும் இருந்தது.

ரணில் தரப்பின் தீவிர முயற்சியின் விளைவாகச் சிலர் அங்கிருந்து அரசுப் பக்கம் உருள்வதற்கும் தயாராக இருந்தார்கள். ஏப்ரல் 4 நாடாளுமன்றத்தின் புதிய அமர்வு தொடங்குவதற்கு முன்தாக இந்த முயற்சிக்கு முழு வீச்சில் வடிவம் கொடுக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 40 பேர் வரையில் ரணிலுடன் வரப் போகிறார்கள் ஏன்று சமூக ஊடகங்கள்மூலமும்ஆட்சிக்கு ஆதரவான ஊடகங்கள் மூலமும் தொடர்ச்சியாகத் தீவிரமாகப் பரப்புரை செய்யப்பட்டது.கொழும்பின்முன்னணி ஆங்கிலப் பத்திரிகையான டெய்லிமிரர் கூட இந்தச் செய்தியைத் தொடர்ந்து பிரசுரித்தது.

டெய்லி மிரர் பத்திரிகை ருவான் விஜேவர்த்தன குடும்பத்துக்குச்சொந்தமானது. ருவான் ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர், ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர். ஏப்ரல் 4 அந்தப் பத்திரிகை ஒருபெரும்பொய்ச் செய்தியை வெளியிட்டது. அந்தச் செய்தியில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொருளாதார வல்லுநர்களுமான கர்ஷ டி சில்வா, கபீர் காசீம், எரான் விக்கிரமரத்ன ஆகியோர் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு ஆட்சியாளர்களோடு இணைகிறார்கள் என்று செய்தி வெளியிட்டது. அதுவும் கபீர் காசிம் கொள்கை வகுப்பு அமைச்சராகப் பதவியேற்கிறார் என்றும் கர்ஷவுக்கான அமைச்சுப் பதவி முடிவு செய்யப்படவில்லை என்றும் அமைச்சுப் பதவி இல்லாமலேயே எரான் ஆட்சித் தரப்பினரோடு சேர்ந்து கொள்கிறார் என்றும் தெரிவித்தது. கடைசியிலல் அதில் எதுவும் நடக்கவில்லை.

இந்தச் செய்தியைப் பார்த்ததுமேசஜித், கர்ஷ, எரான் ஆகியோர் உடனடியாகவே தமது ருவிற்றரில் இந்தச் செய்திக்கு மறுப்புத்தெரிவித்து விட்டனர். பின்னர் கபீர் காசிம் நேரடியாகவே செய்தியாளர்களைச் சந்தித்து அது பொய்என்பதைத்தெரிவித்தார். எரானும் பின்னர் தனது விரிவான மறுப்பறிக்கையை ருவிற்றரில் வெளியிட்டார். இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களைத்தம்பக்கம் இழுக்க ஆளுக்கு 20 கோடி தரலாம் என்று பேரம் பேசப்படும் விடயத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி அம்பலப் படுத்தியது.

மக்கள் சக்தியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு வர்த்தகர் ஒருவர் அழைப்பெடுத்து இது பற்றிப் பேசியுள்ளார். பின்னர் அந்தக்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவரும் அவருடன் பேசியுள்ளார். அவரே 20 கோடி ரூபா தரும் கதையைச் சொல்லியுள்ளார். அந்த நாடாளுமன்ற உறுப்பினர் அது பற்றி சஜித்திடம் போட்டுக்கொடுத்தார். எடுத்த எடுப்பிலேயே இதை எப்படி நம்புவது என்று சஜித் கேட்டார். தன்னிடம் அவர்களின் அழைப்புக்களின் பதிவு இருக்கின்றது என்றார் அந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினர். அப்படியானால் இதைப் பகிரங்கப்படுத்தவா என்று சஜித் கேட்டபோது, தாராளமாகச் செய்யலாம் என்று அந்த உறுப்பினர் அனுமதி வழங்கினார். இதையடுத்து சஜித் இந்த விடயத்தைப் பகிரங்கமாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் மத்தும பண்டார செய்தியாளர்களைச் சந்தித்து இந்தவிடயத்தை அறிவித்தார். இதைத்தொடர்ந்துகாசுதரலாம் ரணில்பக்கம்வாருங்கள்என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசியவர்கள் அமைதியாகி விட்டனர்.

ஆனால் மறுபுறத்தில் விமல் வீரவன்ஸவையும் கம்பன்பிலவையும் மீண்டும் மகிந்தவுடன் நெருக்கமாக்குவதற்கான பேச்சுக்கள் வெற்றியடைந்திருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. சாத்திரத்தில் அதிகம் நம்பிக்கை கொண்டவரான மகிந்தராஜபக்சவுக்கு மே மாதம் 7ஆம் நாள் சிறப்பான நாள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அன்றைய தினத்தில் அவரை மீண்டும் பிரதமர் கதிரையில் அமர வைப்பதற்கான நகர்வுகளும் தொடங்கப்பட்டுள்ளன. அதன் ஒரு பகுதியாகவே விமல் மற்றும் கம்பன்பிலவை மகிந்த பக்கம் இழுக்கும் முயற்சிகள் நடக்கின்றன. அதில் கம்பன்பில மகிந்த பக்கம்மீண்டும்இணைவதில் சாதமான முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றன என்று தெரிகின்றது. கடந்த வாரம் ஒரு நாளில் இருவரும் நேரில் சந்தித்துப் பல மணி நேரம் பேசியிருக்கின்றன. ஐ.எம்.எவ். கடன், அரசின் மக்கள் விரோத முடிவுகள், லாபத்தில இயங்கும் நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தும் அரசின் திட்டம் என்பன போன்ற பல விடயங்களும் அதில் அலசப்பட்டுள்ளன. அதனடிப்படையில் இருவரும் மீண்டும் இணைந்து செயற்படுவதற்கான பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அனேகமாக இந்த வாரம் மகிந்த - விமல் சந்திப்புக் கானவாய்ப்புகளும்ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இரு தரப்புக்கும் இடையில் நடுநிலை வகிக்கும் தரப்புக்கள் இந்தச் சந்திப்புக்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்திருக்கின்றன. அவ வெற்றியளித்திருப்பதாகவும் தகவல். விரைவில் இருவரும் நேரில்சந்தித்துபழையநட்பைப் புதுப்பித்துக்கொள்வார்கள் என்று தெரிகிறது.

**இடிமின்னல்**

### கச்சதீவை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

கச்சதீவு 1976ஆம் ஆண்டில் இருந்து இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியினால் அது வழங்கப்பட்டது. அதனை இந்தியா மீளப்பெறுவது பொருத்தமற்ற செயற்பாடாகும்.

எக்காரணம் கொண்டும் கச்ச தீவினை மீளவழங்கக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். இலங்கைக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்ட ஒரு தீவினை மீளப் பெறுவதை நாம் எதிர்க்கின்றோம் - என்றார்.

### ஸ்டாலின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்திய வளைகுடா பகுதிகளில் இந்திய மீனவர்களின் பாரம்பரியமீன்பிடிஉரிமைகள் மீட்டெடுக்கப்படும். மேலும் மீனவர்களின் உரிமையை மீட்டெடுப்பது தமிழ்நாடு அரசின் முதன்மையான குறிக்கோளாக இருக்கிறது.

இந்த விடயத்தில் பிரதமர் நரேந்திர மோடி உடனடியாக நவடிக்கை எடுக்க வேண்டும் -என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது..

### தாக்குதல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரங்களுக்காகவே முன்னெடுக்கப்படுகின்றன. நவீன உலகில் அனைவரும் சுயநலத்திலேயே மூழ்கியுள்ளனர். அனைவரும் தம்மைப் பற்றி மாத்திரமே சிந்திக்கின்றனர். நானே தலைவன் , நானே உலகில் பெரியவன். எனக்கு உலகில் உள்ள யாரும் அறிவுரை வழங்க வேண்டியதில்லை. எனக்கு யாரும் சாவால்விட முடியாது என்றும் கருதுகின்றனர். அது தவறு.

உயர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று நான்கு வருடங்களாகின்றன இதுவரையில்நீதிகிடைக்கவில்லை. அதற்கான பொறிமுறை உருவாக்கப்படவில்லை. இந்த நிலையில் நீதி எவ்வாறு நிலைநாட்டப்படும் என்ற கேள்விகள்உள்ளன-என்றார்.

### வடக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுநரின்செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் அவரின் செயற்பாடுகள் என்பது அச்சுறுத்தல் பாணியாகத் தான் உள்ளது.

தனக்குத்தான் எல்லா அதிகாரங்களும் இருக்கிறது என்று சொல்லி நியதிச் சட்டங்களை உருவாக்கி அறிவித்தார். .

ஆனால் அதற்கு எதிராக நாங்கள் தொடுத்த வழக்கில் அவரின் அந்தச் செயற்பாடு தவறு அதிகார மீறல் என்று நீதிமன்றமே சொல்லியிருக்கிறது. அதனை அவர்களும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். அதனால் அந்த நியதிச்சட்டங்களையும் இரத்து செய்யும் நிலையில் இருக்கின்றனர்.

கேள்விஇல்லைஎன்றால் ஆளுநர்கள்தாங்கள்நினைத்தபடி எதனையும் செய்து விடலாம் என்ற விடயத்தை இது காட்டுகிறது. நீங்கள் எல்லையை மீறி போனால் நாங்களும் நீதிமன்றம் ஊடகவேனும் கேள்வியை கேட்போம் என்பதை சொல்லியிருக்கிறோம்.

உள்ளூராட்சித் தேர்தல் மட்டுமல்ல மாகாண சபைகளின் தேர்தல்கள்கூட நடைபெறாதபடியால்ஆளுநர்களின் அராஜகம் குறிப்பாக வடகிழக்கில் அதிகமாக நடைபெறுகின்றன.

இனவிரோத செயற்பாடுகள் அதிலும் காணி சம்பநாதமாக

அடாவடித்தமான செயற்பாடுகள் நடைபெறுகிறது. இது தொடர அனுமதிக்க முடியாது. அதற்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுப்போம். ஆகவே ஆட்சியாளர்கள் உனடியாகத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கோருகின்றோம் - என அவர் மேலும் கூறினார்.

### உடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராதனை போதனா வைத்தியசாலையில் சிசேரியன் சத்திர சிகிச்சையின் பின்னர் உயிரிழந்த 26 வயதான கர்ப்பிணித் தாய்க்கு இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மயக்க மருந்து வழங்கப்பட்டதுஎன்றுசுகாதார தொழிற்சங்க தொழில் வல்லுநர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஸ் இதனைத் தெரிவித்துள்ளார். (02)

### அரகலய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களின் நினைவாக ஈகச் சுடரேற்றி இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

அரகலய போராட்டமானது கட்சிபேதமின்றி முன்னெடுக்கட்டதாக தெரிவித்த சட்டத்தரணி நுவன் போபகே, பல்வேறு கலாசாரம், கோட்பாடுகள் உள்ளிட்டவற்றைக் கொண்டவர்களே போராட்டத்தினை முன்னெடுத்தனர் என்றும் தெரிவித்தார்.

அரகலய போராட்டத்தின்போது அறுவர் உயிரிழந்திருந்தனர்.,

# தேசிய வளத்தை நண்பர்களுக்கு விற்பதை பாதுகாக்கவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வருகிறது ஆட்சி

## தேசிய மக்கள் சக்தி செயற்குழு உறுப்பினர் குற்றச்சாட்டு

ஆட்சியாளர்களின்தேசிய வளங்களைத் தமது நண்பர்களுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகயை பாதுகாப்பதற்காகவேபயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் புதிததாக கொண்டுவரப்படுகின்றது என்றுதேசியமக்கள்சக்தியின் செயற்குழுஉறுப்பினர்வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வொன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஆட்சி நாட்டின் வளங்களை விற்பனை செய்வதனையே நோக்கமாக கொண்டுள்ளது. அந்த வளங்களை தமது நண்பர்களுக்கு எவ்வாறு வழங்கலாம் என்பது தான் அவர்களின் திரைமறைவுத் திட்டமாகும்.

இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கினால் அவர்களைப் பயங்கரவாதிகளாக்கி கைது செய்வதையே இந்த ஆட்சி இலக்காகக் கொண்டிருக்கின்றது. அதற்காகவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினைக்கொண்டுவருகின்றது.

தற்போது கொண்டுவரப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகின்றதே தவிர அதில் உள்ள பாரதூரமான விடயங்கள் மாற்றப்படவில்லை.குறித்த சட்டமூலத்தினை முழுமையாக மீளப் பெறவேண்டும். அதற்கான



உத்தியோக பூர்வமான அறிவிப்பைச் செய்யவேண்டும் - என்றார்,

# ஏ.எல். விடைத்தாள் திருத்தம் தாமதிக்க பல்கலை. ஆசிரியர்கள் காரணமல்லர்

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத்திருத்தும் பணிதாமதமாகிமாணவர்கள் பாதிக்கப்படுவதற்கு நாம் காரணமல்ல என்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் மூத்தவிரிவுரையாளர்சாருத்த இலங்கசிங்க தெரிவித்தார்.

பல்கலைக்கழகஆசிரியர்களின்தொடரும்தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயர்தரப்பரீட்சைக்கான விடைத்தாள்கள் திருத்தும் பணிகள்தொடங்கப்படுவதற்கு முன்னதாகவே பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை தொடங்குவதாக அறிவித்து விட்டோம். எனினும், ஆட்சியாளர்ககள் அதனை ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை.

எமது கோரிக்கைகள் தொடர்பில் ஆராயவில்லை. தற்போது உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் செயற்பாடு தாமதமாகின்றமைக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களை காரணம் காண்பிக்கின்றது இந்த ஆட்சி..

இது தவறானது. விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் அல்ல பல்கலைக்கழகத்தின் ஏனைய செயற்பாடுகளும் தாமதமாகியுள்ளன. இவை அனைத்துக்கும் நாம் பொறுப்பேற்க முடியாது. ஆட்சியாளர்களே அதனைப் பொறுப்பேற்கவேண்டும்.

எமது கோரிக்கைகளின் நியாயப்பாடுகள் தொடர்பில் இதுவரையில்ஆட்சியாளர்கள் பொருட்படுத்தி பேச்சுக்களை முன்னெடுப்பதற்குத்தயாராக இல்லை - என்றார்.

# மோ. சைக்கிள் ரயர் வெடித்ததில் தாய் சாவு; இரு பிள்ளைகள் காயம்

சிலாபம் இரணைவில வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளின் ரயர் வெடித்து விபத்துக்குள்ளானதில்மூன்று பிள்ளைகளின்தாய்உயிரிழந்துள்ளதுடன் அவரது இரண்டு பிள்ளைகளும், அவரது கணவரும் படுகாயமடைந்து சிலாபம் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலாபம், மெதவத்தை பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் தனது 10 மற்றும் 13 வயதுடைய இரண்டு பிள்ளைகளுடன் இரணவில கடற்கரை வீதியிலிருந்து சிலாபம் நோக்கி தனது கணவர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளில் பயணித்த போது மோட்டார் சைக்கிளின் பின் சக்கரம் திடீரென வெடித்துக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து இரண்டு பிள்ளைகளும் கணவனும் வீதியை விட்டு தூக்கி வீசப்பட்ட நிலையில் பெண் நடு வீதியில் வீழ்ந்துள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்ட சிலாபம்தலைமையகப்பொலிஸாரின் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நடு வீதியில் தூக்கி வீசப்பட்ட பெண் பின்னால் வந்த சிறிய ரக லொறி மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (02)

# திருகோணமலை துறைமுகத்தில் அமெரிக்காவின் கடற்படை கப்பல்

அமெரிக்காவின் யு.எஸ். என். எஸ் பிரன்சுவிக் என்ற கடற்படையின் போக்குவரத்துக் கப்பல் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இது, அமெரிக்ககடற்படை கட்டளையின் விரைவுப் போக்குவரத்துக்கப்பல்ஆகும்.

துருப்புக்கள் மற்றும் இராணுவ உபகரணங்கள், உள் திரையரங்கு மற்றும் போக்குவரத்தை வழங்கும் திறன் கொண்ட இந்தக் கப்பலில் 1200 கடல் மைல் தூரத்துக்கு 600 தொன் உபகரணங்களை எடுத்துச் செல்ல முடியும்.

இதன் சராசரி வேகம் மணிக்கு 25 கடல் மைல்கள்



என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள்நிரப்பலுக்காக இந்தக்கப்பல்திருகோணமலை துறைமுகத்துக்கு நேற்று (08) மாலை வந்துள்ளது என்றும், எதிர்வரும் 12 ஆம் திகதி அங்கிருந்து புறப்படும் என்றும்இலங்கைக்கடற்படை தெரிவித்துள்ளது. (02)










# தமிழர் இருப்புக்களை பாதுகாக்க பொதுக்கட்டமைப்பு உருவாக்கம்!



அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராகவும் தமிழர்களின் இருப்பை பாதுகாப்பதற்குமான பொதுக்கட்டமைப்பு ஒன்று வவுனியாவில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) உருவாக்கப்பட்டது.

தமிழர்பகுதிகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் பௌத்தமயமாக்கல் போன்ற செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கான பொறிமுறைகளை உருவாக்குவது தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது குறித்த விடயங்கள் தொடர்பாக எதிர்வினையாற்றுவதற்காக இரு கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்கள் மற்றும் பௌத்தமயமாக்கல், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், காணிகள் அபகரிப்பு, தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் தொடர்பான தரவுகளை சேகரித்து அவற்றை துல்லியமாக அடையாளம் காண 7 பேர் கொண்ட கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

அத்துடன் அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராக வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் மாபெரும் சாத்வீகப்போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்காக மற்றொரு கட்டமைப்பும் உருவாக்கப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் மதகுருமார்கள், தமிழ் அரசுக்கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் விடுதலைக் கழகம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், புதிய ஜனநாயக மாக்ஸ்சிச லெனினிசகட்சி, தமிழர் விடுதலை கூட்டணி, ஜக்கியதேசிய கட்சி, ஶ்ரீ தமிழ் ஈழ விடுதலை இயக்கம் போன்ற அரசியல் கட்சிகளும், பொது அமைப்பினரும் கலந்துகொண்டனர்.

# நுகர்வோருக்கு நிவாரணம் வழங்காத உணவகங்களைப் புறக்கணிப்போம்

## நுகர்வோர் உரிமைகள் ஒழிப்பு தேசிய இயக்கம் கோரிக்கை

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்காத உணவகங்கள் இருந்தால், அந்த உணவகங்களை புறக்கணிக்க வேண்டும் என நுகர்வோர் உரிமைகள் ஒழிப்பு தேசிய இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபை தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கத் தவறினால், அந்த அதிகாரசபையை மூடுவதே சிறந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

முட்டையை இறக்குமதி செய்வதற்கான வர்த்தமானியை வெளியிட்ட வர்த்தக அமைச்சர், விலையை கட்டுப்படுத்த தேவையான வர்த்தமானி ஏன் வெளியிடப்படுவதில்லை என கேள்வி எழுப்பியுள்ளார்.

பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைந்துள்ளன எனவும் இறைச்சியின் விலைகள் மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளன எனவும் அசேல சம்பத் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் புத்தகம் முதல் கம்பி வரை அனைத்துப் பொருள்களின் விலைகளும் குறைக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மக்களுக்கு சலுகைகளை வழங்காத வர்த்தகர்கள் அரசாங்கத்துக்கு எதிரான அரசியல் கட்சிகளின் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றன எனவும் அசேல சம்பத் குற்றம் சுமத்தினார்.

அதற்கமைய, வியாபாரிகள் அரசியல் செய்ய விரும்பினால், கடையை விட்டு வெளியே வந்து அதைச்செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் உயிர்த்த ஞாயிறு வழிபாடு



கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளிலும் உயிர்த்த ஞாயிறு வழிபாடுகள் இடம்பெற்றன.

அனைத்து தேவாலயங்களிலும் விசேட திருப்பலி வழிபாடுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி ஜெபாலய மிசன் தேவாலயத்தில் விசேட வழிபாட்டில் மக்கள் கலந்துகொண்ட அதேநேரம் முறிகண்டி தென்னிந்திய திருச்சபையில் விசேட நற்கருணை வழிபாடும் இடம்பெற்றது.

உயிர்ப்பின் அடையாளமாக அதிகாலை மெழுகுவர்த்தி ஏந்தியவாறு சாட்சி பவனி இடம்பெற்றதுடன் திருப்பலியை வணக்கத்துக்குரிய கத்தரின் ஒப்புக்கொடுத்தார்.

இதேவேளை, கிளிநொச்சி அங்கிலிகன் திருச்சபையிலும் விசேட வழிபாடு இடம்பெற்றது.

# நாடு முழுவதும் திடீர் சோதனைகள் பெருமளவு அதிகாரிகள் களமிறக்கம்

## உபுல் றோஹண அதிரடி அறிவிப்பு



நாடு முழுவதும் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைக்காக சுமார் 3,200 அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமக சந்தையில் தற்போது காலாவதியான மற்றும் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருள்கள் மிகவும் குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பில் பொது மக்கள் அவதானம் செலுத்த வேண்டும் என அவர் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை, உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் உணவுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

விசேடமாக பண்டிகை காலத்தில் உற்பத்தி செய்யப்படும் உணவுகள் மற்றும் அவற்றுக்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் தொடர்பில் ஆராயப்படும் என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

சந்தேகத்துக்கு இடமான முறையில் ஏதேனும் செயற்பாடுகள் இடம்பெற்றால், அவற்றை 011 263 5675 என்ற பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தொலைபேசி இலக்கத்துக்கு பொதுமக்கள் அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.


# இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 26 புதிய பஸ்கள் நுவரெலியாவுக்கு!

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள இ.போ.சவுக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு இந்திய அரசாங்கத்தால் கடன் உதவித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட புதிய பஸ்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் இடம்பெற்றது.



இருமாவட்டங்களில் உள்ள ஏழு டிப்போக்களுக்கு 26 புதிய பஸ்கள் இதன்போது கையளிக்கப்பட்டன. மேலும் இந்த புதிய பஸ்கள் கிராமப்புற மற்றும் தோட்டப்புற மக்களுக்கு முறையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ளன.

இந்த புதிய பஸ்கள் நுவரெலியா மாவட்டத்தில் ஹற்றன், நுவரெலியா, கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்த மற்றும் கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி மற்றும் கம்பளை ஆகிய டிப்போக்களுக்கே வழங்கப்பட்டுள்ளன.



இதன்போது, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. பி. ரத்நாயக்க, எஸ். பி. திசாநாயக்க, மருதப்பாண்டி ரமேஸ்வரன் மற்றும் டிப்போ அத்தியட்சகர்கள், டிப்போ ஊழியர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பெருமளவானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இந்திய மீனவர் பிரச்சினைக்கு கச்சதீவு மீட்பு தீர்வாகாது

கச்சதீவை மீட்டெடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியிடம் வலியுறுத்தியிருக்கிறார். தமிழகத்திற்கு 2 நாள் பயணமாக வந்த நரேந்திர மோடியிடம் தமிழ்நாடு முதலமைச்சர் இந்தக் கோரிகையை மனுவாகக் கையளித்துள்ளார்.

அந்த மனுவில், தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையைப் பாதுகாப்பதற்குக் கச்சத்தீவை மீட்டெடுக்கவேண்டும். தமிழ்நாட்டில் ராமநாதபுரம், நாகை, புதுக்கோட்டை, திருவாரூர் மற்றும் தஞ்சை போன்ற மாவட்டங்களில் வாழும் மீனவர்கள் நேரடியாக மீன்பிடித் தொழிலை நம்பியுள்ளனர். இருநாடுகளுக்கும் இடையிலான கடல்எல்லைக்கோட்டினை தாண்டிச்செல்லும் நிகழ்வுகளால் இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துகிறார்கள். இந்த தாக்குதல் இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையேயான உறவுகளைச் சீர்குலைக்கும். எனவே கச்சதீவை இந்தியாவிற்குத் திரும்பப் பெறவேண்டும்.

அப்போதுதான் பாக்கு நீரிணையை மையப்படுத்திய வளைகுடா பகுதிகளில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகள் மீட்டெடுக்கப்படும். மேலும் மீனவர்களின் உரிமையை மீட்டெடுப்பது தமிழ்நாடு அரசின் முதன்மையான குறிக்கோளாக இருக்கிறது. இந்த விடயத்தில் பிரதமர் நரேந்திர மோடி உடனடியாக நவடிக்கை எடுக்க வேண்டும் –என்றெல்லாம் அந்த மனுவில் கூறப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

பாக்கு நீரிணையில் இரு நாடுகளுக்கும் இடையில் இருப்பது சர்வதேச கடல் எல்லை அல்ல. ஒரு நாட்டுக்கு அனுமதிக்கப்பட்ட கடல் எல்லையிலும் பார்க்க பாக்கு நீரிணைப் பகுதி மிகக் குறுகலானது. ஒரு நாட்டுக்கு 12 கடல் மைல் தூரமே அதன் சொந்தக் கடல் பகுதி. பாக்குநீரிணையில் இரு நாடுகளின் சொந்தக் கடல்பகுதியும் ஒன்றை ஒன்று தாண்டிச் செல்லும் அதனால், ஒரு கட்டுப்பாட்டு எல்லை பிரிக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பிரிப்பின் வழியே இலங்கைக் கடல் பகுதிக்குள் வரும் கச்சதீவை இலங்கையிடமே ஒப்படைக்க இந்தியா இணங்கியது.

இருப்பினும் அந்தத் தீவில் இந்திய மீனவர்களுக்கு இருந்த பாரம்பரியமான உரிமைகள் தொடர்ந்தும் பேணப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. அதாவது கச்சதீவு அந்தோனியார் திருவிழாவிற்கு கடவுச்சீட்டு இன்றிச் செல்வது மற்றும் மீனவர்கள் தமது வலைகளை உலர்த்தி ஓய்வெடுப்பது போன்ற நோக்கங்களுக்காக அந்தத் தீவைப் பயன்படுத்துவது என்பன அவர்களின் பாரம்பரிய உரிமைகளாகக் கருதப்படுகின்றன. இதில் கடும் கெடுபிடிகளுடன் அந்தோனியார் ஆலயத் திருவிழாவிற்கு இந்திய மீனவர்கள் வருவது அனுமதிக்கப்பட்டபோதும் கச்சதீவில் வலைகளை உலர்தத்தவோ ஓய்வெடுக்கவோ இந்திய மீனவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

ஆனால் இந்த உரிமைகளை மீட்டெடுப்பதற்காகத் தமிழ்நாடு முதலமைச்சர் கச்சதீவை மீட்டுத் தரக் கோரவில்லை. இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழையும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படும் பிரச்சினைக்கான தீர்வாகவே கச்சதீவை மீட்கக் கேட்கிறார். உண்மையில் இந்திய மீனவர்கள் கச்சதீவைச் சுற்றிய கடலில் மீன்பிடிப்பதில் இல்லை பிரச்சினை. அவர்கள் அந்த எல்லைகளையும் தாண்டி, இலங்கையின் எல்லைகளுக்கு மிக அருகில் வந்து மீன்பிடியில் ஈடுபடுவதே பிரச்சினை. இலங்கையின் சொந்தக் கடல் எல்லைக்குள் பல மைல் தூரம் அவர்கள் ஊடுருவி வருகின்றார்கள். உள்ளூர் மீனவர்கள் பாரம்பரியமாகத் தொழில் செய்யக்கூடிய பகுதிகளைத் தாண்டியும் அவர்களது ஊடுருவல் நிகழ்கின்றது. இது கச்சதீவைத் தாண்டியும் நிகழும் பல மைல் தூர ஊடுருவல். அத்தகைய ஊடுருவலின்போதே இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

இந்தப் பிரச்சினைக்கு கச்சதீவை இந்தியா மீட்பதால் எந்தத் தீர்வும் கிடைக்கப்போவதில்லை. கச்சதீவை மீட்பது தமிழ்நாட்டின் அரசியல் கோரிக்கையாக இருக்கலாம். ஆனால் அது இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கான தீர்வாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை தோற்கடிக்க ஆளுந்தரப்பிலும் ஆதரவு

### தயாசிறி நம்பிக்கை



பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை விட, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மோசமானது. இதனை எதிர்க்கும் ஜனநாயகத்தை மதிக்கும் ஆளுந்தரப்பு உறுப்பினர்களும் உள்ளனர்.

அவர்களையும் இணைத்துக்கொண்டு, சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து நாடாளுமன்றத்தில் இந்த சட்டமூலத்தை தோல்வியடைச் செய்வோம் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் சு.கவின் நிலைப்பாடு தொடர்பாக வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். 1979 இல் தயாரிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விட மோசமானதாக இந்த சட்டமூலம் காணப்படுகிறது.

இதன் ஊடாக ஊடகங்கள் மற்றும் எந்தவொரு ஆர்ப்பாட்டத்தையும் முடக்கும் அதிகாரம், எந்தவொரு நபரையும் கைது செய்வதற்கும், தடுத்து வைப்பதற்கும் ஜனாதிபதிக்கு காணப்பட்ட அதிகாரம் சகல சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பிரஜைகளை துன்புறுத்தக்கூடிய நிலைமையும் ஏற்படும்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் சகல மாவட்டங்களிலும் 90 நாள்கள் தடுத்துவைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் அதிகரிக்கும். எனவே, இதனை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். சர்வாதிகார ஆட்சியை நாட்டில் ஏற்படுத்தவே இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடத் தீர்மானித்துள்ளோம். இவ்வாறு எழுந்துள்ள எதிர்ப்புக்களின் காரணமாகவே அரசாங்கம் ஓர் அடியைப் பின்வைத்துள்ளது.

அரசாங்கத்திலும் இந்த சட்டமூலத்தை எதிர்க்கும் சிலர் உள்ளனர். அவர்களையும் இணைத்துக்கொண்டு, எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து இதனை நாடாளுமன்றத்தில் தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

அரசாங்கத்துடன் இணைவதற்கு சுதந்திரக் கட்சிக்கு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை. சர்வகட்சி அரசாங்கமொன்று அமைக்கப்படுமானால், அதற்கு எமது ஆதரவை வழங்கத் தயார். இதனை சு.க. தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற் கனவே தெரிவித்துள்ளார்.

மாறாக, ஒவ்வொருவரும் தத் தமது விருப்பத்துக்குச் சென்று அமைச்சுப்பதவிகளை பொறுப்பேற்பதை அனுமதிக்க முடியாது. - என்றார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து அஞ்சத்தேவையில்லை

### அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் எவரும் எந்தவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைமைக்காரியாலயத்தை திறந்துவைத்த பின்னர் அங்கு உரையாற்றிய அபோதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் முன்னெடுத்த போராட்டங்களை முடக்குவதற்கு அன்று கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தை விட இந்தச் சட்டம் தொடர்பில் கவலையடையத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஒரு நாட்டின் ஸ்திரத் தன்மைக்கு சட்டங்கள் அவசியமாகும் என்றும் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.



இதனை அமெரிக்கா உட்பட பல நாடுகள் கைக்கொண்டுள்ளன

ஆகவே நாட்டின் சட்ட திட்டங்களை மதித்து நடந்தால் இவ்வாறான சட்டங்கள் தொடர்பிஸ்ரீல் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டார்.

# ஈஸ்டர் தாக்குதல் பாதித்த மக்களுக்கு நியாயம் என்றும் கிடைக்கமாட்டாதாம்

### அடித்துக் கூறுகின்றார் முஜிபுர் ரஹ்மான்



உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல் இடம்பெற்று நான்கு வருடங்கள் பூர்த்தி அடைந்துள்ளது. எனினும், இதுவரையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியையும், குற்றவாளிகளுக்குதண்டனையையும் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

எதிர்காலத்திலும் தீர்வு கிடைக்காது. இதன் பின்னணியில் அரசியல்வாதிகளின் சூழ்ச்சி காணப்படுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவிக்கு வந்த பிறகு, உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய தரப்பினருக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார். இன்று வரையில் அவரும் மௌனம் காக்கிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து கூறுகையில் -

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை தீவிரவாத முஸ்லிம் குழுவொன்று நடத்தியதாக கூறப்பட்டாலும், நாட்டில் ஆட்சி மாற்றமொன்றை கொண்டு வருவதற்காகவே குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதல் இடம்பெற்று 4 வருடங்கள் கடந்துள்ள நிலையில், குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதில் இன்று வரையில் இழுபறிநிலை காணப்படுகிறது. இதன் பின்னணியில் சில அரசியல்வாதிகளின் சூழ்ச்சிகள் இருப்பதையே இது பிரதிபலிக்கிறது.

பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிய முன்னதாகக் காணப்பட்ட குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு பதிலாக புதிய பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபயசேகரவை கைதுசெய்ததுடன், குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் ரவி செனவிரத்னவையும் வீட்டுக்கு அனுப்பினார்கள்.

இவ்வாறு உயர் அதிகாரிகளை விரட்டி தமக்கு சாதகமான புதியவர்களைப் பதவிகளுக்கு கொண்டு வந்தனர். இருப்பினும், இந்த புதிய குழுவினரால் இன்று வரையில் எதுவித உண்மைகளும் கண்டறியப்படவில்லை.

இதேவேளை மூன்றாவது முறையாக சாராவின் டி.என்.ஏ பரிசோதனையை மேற்கொண்டு அவர் உயிரிழந்துள்ளார் என அறிவிக்கின்றனர். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்துகிறது. காரணம், இவ்வளவு காலம் கண்டறியப்படாத இந்த விடயம் தற்போது திடீரென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாருடைய தேவையை பூர்த்தி செய்வதற்காக மூன்றாவது முறையாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது?

நாட்டில் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்காக அப்பாவி மக்களின் உயிரைப் பறித்தனர். இனங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்தி மோதலை உருவாக்கினார்கள். இந்த மோதல்களின் போதும் கலவரங்களின் போதும் பலர் உயிர், சொத்துக்கள், உடைமைகள் என பலவற்றை இழந்தனர்.

எதைஎதிர்பார்த்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதோ, அதனை சிலர் நிறைவேற்றிக் கொண்டார்கள். இனவாதத்தின் ஊடாக ஆட்சி அதிகாரங்களை பெற்றுக்கொள்வதற்காகவே மிலேச்சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுஎன்பதை மக்களும் தற்போது புரிந்து கொண்டுள்ளார்கள்.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவிக்கு வந்த பிறகு உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புடைய தரப்பினருக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார். இன்று வரையில் அவரும் மௌனம் காக்கிறார்.

எதிர்காலத்தில் தாக்குதல் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்கப் போவதுமில்லை. தாக்குதல் மேற்கொண்ட தரப்பினருக்கு தண்டனை கிடைக்கப் போவதுமில்லை. - என்றார்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# ரணில், சஜித் மற்றும் பஸில் ஆகியோரிடம் உறுதியான அரசியல் கொள்கை இல்லை

## நளிந்த ஜயதிஸ்ஸ சாட்டை



ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் இணைந்தே ஆட்சியமைக்கவுள்ளனர்.

நாட்டுக்குத் தற்போது தேவையாக உள்ள ஸ்திரமான அரசியல் கொள்கை இவர்களிடம் இல்லை. மாறாக, ஒருவரையொருவர் பாதுகாப்பதே இவர்களின் நோக்கமாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

கட்சித் தாவல்களால் நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது. நாட்டில் அரசியல் வரலாற்றில் இதுபோன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ராஜித சேனாரத்ன மற்றும் மஹிந்த அமரவீர உள்ளிட்டோர் வாழ்நாளில் அதிக நாள்களில் அமைச்சர்களாக பதவி வகித்தவர்களாவர். எனவே, அவ்வாறானவர்களால்அமைச்சுப்பதவியின்றி இருக்க முடியாது. இவர்கள் கட்சித் தாவுவதால்எவ்வித மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை.

ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் இணைந்தே ஆட்சியமைக்கவுள்ளனர்.

தமது நாடாளுமன்ற உறுப்பினர்களை 20 கோடி ரூபாவுக்கு பேரம் பேச அரசாங்கம் தயாராகியுள்ளது என்பதை கூறுவதற்கு கட்சித் தலைவர் என்ற ரீதியில் சஜித் பிரேமதாஸ வெட்கமடைய வேண்டும்.

கட்சித் தலைமைத்துவம் குறித்த பிரச்சினையையே இது காண்பிக்கிறது.

தற்போது இந்நாட்டுக்கு ஸ்திரமான அரசியல் கொள்கைகள் அவசியமாகும். அவ்வாறான ஸ்திரமான கொள்கை அரசாங்கத்திடம் இல்லை. மாறாக, அரச சொத்துக்களை கொள்ளையிட்டவர்களை பாதுகாப்பதையும், தொடர்ந்தும் அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்குமே இவர்கள் கூட்டாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். - என்றார்.

# பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு புதுவருடத்துக்கு நட்டஈடு வழங்க முடிவு

## அமைச்சர் டக்ளஸின் ஏற்பாட்டில்



எக்ஸ்பிரஸ்பேர்ள்கப்பல்விபத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான நஷ்டஈட்டின் நான்காவது கட்டத்தை தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பிற்கு முன்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சரின் தொடர்ச்சியான முயற்சியால் குறித்த கப்பல் விபத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழில் சார்ந்த மக்களுக்கான நான்காவது கட்ட நஷ்டஈட்டு தொகையாக சுமார் 15 ஆயிரத்து 149 லட்சம் ரூபா கடற்றொழில் அமைச்சிற்கு கிடைத்துள்ளது.

இந்நிலையில், அவற்றை உடனடியாக பயனாளிகளுக்கு வழங்கி வைப்பதற்கான ஆலோசனைகளும் கடற்றொழில் அமைச்சரினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் நான்காம் கட்ட நஷ்டஈட்டைப் பெற்றுக் கொள்வோர் தொடர்பான விவரங்கள்கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களை சேர்ந்த கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தின் அதிகாரிகள் ஊடாக சம்மந்தப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் காசோலைகளை சம்பந்தப்பட்ட மாவட்ட செயலகங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளையும்கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே மூன்று கட்டங்களாக கிடைத்திருந்த நஷ்டஈட்டு தொகை பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையில், தற்போது கிடைத்துள்ள நான்காவது கட்ட நஷ்டஈட்டை கடலுணவு வியாபாரிகள், கருவாடு உற்பத்தியாளர்கள் போன்ற கடற்றொழில் சார்ந்த தொழிலாளர்களுக்கும் பகிர்ந்தளிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவின் கடன் மறுசீரமைப்பு அமெ. நம்பிக்கை தெரிவிப்பு



இலங்கையின் கடனை மறுசீரமைக்க சீனா ஒப்புக் கொண்ட நிலையில், தாம் அதில் நம்பிக்கையுடன் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடனை மறுசீரமைப்பதில் பங்கேற்பதற்கான சீனாவின் தீர்மானம், நம்பிக்கைக்குரிய அறிகுறி என அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜேனட் யெலன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மத்திய வங்கியாளர்கள், நிதி அமைச்சர்கள் மற்றும் 180 இற்கும் மேற்பட்ட உறுப்புநாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வசந்த காலக் கூட்டங்களுக்கு அமெரிக்க தலைநகரில், எதிர்வரும் வாரத்தில் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக சர்வதேச செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இதன்போது இலங்கையின் விடயமும் முக்கியத்துவம்பெறும்என்றுஎதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மருமகன் தாக்கி மாமியார் சாவு

பொல்பித்திகம, அலுத்வெகெதர பிரதேசத்தில் பெண் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த பெண் சனிக் கிழமை மாலை தனது கண வன் மற்றும் மருமகனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட் டபோது, அவரது மருமகனால் தாக்கப்பட்டு உயிரிழந்துள் ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொல்பித்திகம, அலுத்வெகெதர பிரதேசத்தில் வசிக்கும் 59 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

அவரது கணவரும் காயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொலையுடன் தொடர் புடைய சந்தேக நபரான அவர்களது மருமகன் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

அத்துடன், அவரை கைதுசெய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# 10 வாகனங்கள், வீட்டை மோதித்தள்ளிய கிரேன்

## 4 பேர் படுகாயம்; கல்எலியவில் சம்பவம்

பஸ்யால - மீரிகம வீதியின் கல்எலிய நகரில் நிறுத்தப்பட்டிருந்த 10 வாகனங்களோடு கிரேன் ஒன்று மோதியதுடன், அது மதில் மற்றும் கதவுகளை உடைத்துக்கொண்டு சென்று வீடொன்றின் மீதும் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.





இந்த சம்பவத்தில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

பஸ்யாலயிலிருந்து மீரிகம நோக்கி பயணித்த கிரேன் வாகனம் மக்கள் நெரிசல் மிகுந்த கல்எலிய நகர வீதியில் அதிவேகமாக பயணித்து, வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 ஓட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது.

அத்தோடு அந்த கிரேன் வாகனம் ஒரு வீட்டின் மதில் மற்றும் கதவுகளையும் உடைத்துக்கொண்டு சென்று, வீட்டின் மீது மோதியபடி நின்றுள்ளது.

இந்தசம்பவம்தொடர்பில்பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கியு.ஆர். முறைமையை மீறியமையால்

# தடைசெய்யப்பட்ட 40 நிலையங்களுக்கு ஏப்ரல் 12 முதல் எரிபொருள் விநியோகம்

கியு.ஆர். விதி முறையை மீறி எரி பொருள் விற்பனை செய்ததற்காக தடை செய்யப்பட்ட 40 ‘சிபெட்கோ’ எரிபொருள்நிலையங்களுக்கு எதிர்வரும்12 ஆம்திகதி முதல் எரிபொருள் விநியோகம் செய்யப்படவுள்ளது என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.



அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு ஒருவாரத்துக்கு மாத்திரமே தடை விதிக்கப்பட்டதாக தெரிவித்த அந்த அதிகாரி, எதிர்வரும் 11 ஆம் திகதியன்று ஒரு வாரம் நிறைவடைகிறது என்றும், 12 ஆம் திகதி முதல் எரிபொருள் விநியோகிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.




காலைக்கதிர் Kalaikkathir


# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS













### INCLUSION

- 04 Night stay in Kuala Lumpur
- Daily breakfast at hotel
- Return AirTicket
- Getting Highland tour with cable car
- City tour on arrival day
- Evening tour to twin tower
- Batu caves temple visit
- Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

**Travel Date: 19 - 23 May 2023**

Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.04.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 26 ஞாயிற்றுக்கிழமை 09.04.2023 கதிர் 23

## இரு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!




நாட்டில் நிலவும் கடும் மழை காரணமாக இரண்டு மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் இந்த 2

## இரு அரச நிறுவனங்கள் கடும் நிதி நெருக்கடியில்

### ஊழியர்களுக்கு வழங்கிய கடனால்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடெட் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவை தமது ஊழியர்கள் வாங்கிய கடனைத் திருப்பிச்செலுத்தாததன் விளைவாக இப்போது கடுமையான நிதி விளைவுகளை எதிர்கொள்வதாகக் கணக்காய்வாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2022 ஆகஸ்ட் இறுதியில் சுமார் 1,051 பில்லியன் ரூபா திரட்டப்பட்ட இழப்பைப் பதிவு செய்தது.

இந்தநிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை 2021 இல் 3.36 பில்லியன் ரூபாவாகவும், 2022 இல் 4.31 பில்லியன் ரூபாவாகவும் இருந்தன.

நிறுவனங்களால் குறிப்பிடத்தக்க கடன் திட்டம் பராமரிக்கப்பட்டு வந்தாலும், கடன் தொடர்பில் முறையான நிதிக் கொள்கை எதுவும் நிறுவப்படவில்லை.

அத்துடன் ஊழியர்களின் அடிப்படை வருமானம், கடன் தவணை மற்றும் இதர செலவுகளுக்கு போதுமானதாக இல்லாத காரணத்தால், அவர்கள் கூடுதல் நேரம் வேலை செய்ய வேண்டியுள்ளது.

அதன்படி, கூட்டுத்தாபனத்தின் மொத்த ஊழியர்களில் 40 சதவீதத்துக்கும் மேலானவர்களும், ஸ்டோரேஜ் நிறுவனத்தின் மொத்த ஊழியர்களில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்களும் தங்களது அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதத்துக்கு மேல் கூடுதல் நேரம் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

கடனைத் திருப்பிச்செலுத்தும் திறனைப் பொருட்படுத்தாமல் பொருத்தமற்ற கடன் திட்டங்களைச் செயற்படுத்தியதன் விளைவாக ஊழியர்கள் கடன் வாங்கத் தூண்டப்பட்டனர்.

இது நிறுவனங்களின் கூடுதல் நேரச் செலவுகளில் தேவையற்ற அதிகரிப்பை நேரடியாகப் பாதித்தது என்று கணக்காய்வாளர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலி யக்கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலியம் ஸ்டோரேஜ் 2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குற்றவாளிகளோடு சேர்த்து

# அரகலயவினரையும் தூக்கிலிடவேண்டும்

### ஜோன்சன் பெர்னாண்டோ எம்.பி. சீற்றம்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குற்றவாளிகளையும், காலிமுகத்திடல் போராட்டக்காரர்களையும் மக்கள் முன்னிலையில் தூக்கிலிடவேண்டும். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கு இந்த இரண்டு தீவிரவாதத் தரப்பினர்களே முக்கியமான காரணகர்த்தாக்கள்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினமன்று நடத்தப்பட்ட தாக்குதலின் குற்றவாளிகளுக்கு இன்னமும் உரிய தண்டனை வழங்கப்படவில்லை. தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்கள் நீதி வேண்டி அலைந்து திரிகின்றார்கள். 2

## குடும்பக் கட்டுப்பாடு செய்வோர் எண்ணிக்கை திடீரென அதிகரிப்பு

### பொருளாதார நெருக்கடி காரணம்

பொருளாதார நெருக்கடி காரணமாக குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளும் இலங்கையர்களின் எண்ணிக்கை சடுதியாக உயர்ந்துள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

2021ஆம் ஆண்டில், இலங்கையில் 2 லட்சத்து 25 ஆயிரத்து 492 பேர் குடும்பக் கட்டுப்பாட்டுச் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 29,993 பேருக்குக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்படுள்ளது, நாட்டின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிவரங்கள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையின்படி., 2020 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 96 ஆயிரத்து 693 பேர் குடும்பக் கட்டுப்பாடுக்கு விண்ணப்பித்துள்ளனர், இது குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஆகும்.

2012ஆம் ஆண்டில், 21 ஆயிரத்து 109 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன, மேலும் அந்த ஆண்டிற்குப் பிறகு, 2021ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான கருத்தடை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதாக இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

2021ஆம் ஆண்டில், குடும்பக் கட்டுப்பாட்டு அமைப்புகளின் கீழ் 28,531 பேருக்கு லூபஸ் இருந்தது மற்றும் 44,462 பேர் விழுங்கும் மாத்திரைகளைப் பயன்படுத்தியுள்ளனர். தடுப்பூசி போடுவதற்காக 79 ஆயிரத்து 622 பேர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

## உண்டியல், ஹெரோயின் கடத்தல் இருவர் கைது; ரூ. ஒரு கோடி மீட்பு

உண்டியல் முறையில் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்ட இருவரைப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படை தலைமையகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர்கள் நீண்டகாலமாகக் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், இதன் மூலம் கிடைக் கும் பணம் உண்டியல் முறையின் ஊடாகப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கைதான சந்தேக நபர்களிடமிருந்து சுமார் ஒரு கோடி ரூபாவும், பணம் எண்ணும் இயந்திரமும் கைப்பற் றப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் விசேட அதிரடிப் படை யினர் தெரிவித்துள்ளனர். (02)

## பயணச்சீட்டின்றி ரயில்களில் பயணிப்போர் அதிகரிப்பு



பயணச்சீட்டின்றி ரயிலில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது என்று ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பஸ் பயணக் கட்டணத்தைவிடக் குறைவான கட்டணம் வசூலிக்கப்படும் ரயில் சேவையின் மூலம் பயண வசதி பெறும் பயணிகள் அவ்வாறு செய்கின்றமையால் திணைக்களத்தின் வருமானம் மேலும் குறையும் என்று ரயில் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

இந்தநிலையில், பயணச்சீட்டு இல்லாமல் ரயிலில் பயணம் செய்யும் பயணிகளிடம் அறவிடப்படும் அபராதத்தை உயர்த்துவது குறித்து ரயில் திணைக்களம் கவனம் செலுத்தி வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது இவ்வாறு பயணிக்கும் பயணிகளிடம் இருந்து இரு மடங்கு பயணச்சீட்டு கட்டணமும், மூவாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், அபராதத் தொகை 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் ரயில் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி கூறினார்.

பயணச்சீட்டு பரிசோதகர்கள் இல்லாததால் ரயிலில் பயணச்சீட்டின்றி பயணிக்கும் பயணிகளைச் சோதனை செய்யும் நடவடிக்கையும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது ரயில் திணைக்களத்துக்கு மாதாந்தம் 1,300 இலட்சம் ரூபா வருமானம் கிடைக்கின்றது என்றும் அவர் மேலும் கூறினார். (02)

### வலுக்கட்டாயமாக வைக்க முடியாது என்பவர்

## விக்கிரங்கள் உடைக்கப்பட எப்படி அனுமதித்தார் ரணில்?

### சிறிதரன் எம்.பி. கேள்வி



விக்கிரகங்களை யாரும் வலுக்கட்டாயமாக வைக்க முடி யாது என்று கூறுகின்ற ஜனாதிபதி ஏற்கனவே உள்ள விக்கிரகங்களை உடைப்பதற்கு எவ்வாறு அனுமதி கொடுத்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முரசுமோட்டை வட்டாரக் கிளையின் புதிய நிர்வாகத் தெரிவு சனிக்கிழமை முரசுமோட்டை முருகன் கோவில் முன்றலில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றம் போட்ட கட்டளையை மீறி குருந்தூர் மலையிலே விகாரை அமைக்கப்படுகின்றது. வெடுக்குநாறி மலையிலே விக்கிரகங்கள் உடைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழர் வழிபாட்டிடங்களில் விகாரை அமைப்பதற்கு ஜனாதிபதி அனுமதிக்கிறார்.

சிங்கள பௌத்த பேரினவாதம் எதைச் செய்தாலும் அவர் மௌனமாக இருப்பார் ஆனால் தமிழர்கள் எதையும் செய்யக்கூடாது. என்றும் அவ்வாறு செய்தால் அது வலுக்கட்டாயம் என்றும் கருத்துச்சொல்வார். அதை வைத்து அரசியல் செய்யக்கூடாது என்றும் சொல்வார்.

இவ்வாறான ஒரு நெருக்கடிக்குள் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் சுயாட்சியைப் பெறுவதற்காக நீண்ட நெடுங்காலமாக போராடி வருகின்றோம் அதற்காக பல்லாயிரக் கணக்கான உயிர்களை விலையாகக கொடுத்திருக்கின்றோம். பலரை இழந்திருக்கின்றோம். பெறுமதி மதிப்பிடப்படமுடியாத சொத்துக்களை இழந்திருக்கின்றோம். இதையெல்லாம் கடந்தும் இந்த மண்ணில் எமக்கான விடுதலை நோக்கிய பயணத்தைத் தொடரவேண்டியிருக்கிறது. அதற்காக எமது அடையாளங்களை நாங்கள் பேண வேண்டும் என்பது எமக்கு முன்னால் உள்ள வரலாற்றுக் கடமை. அந்தக் கடமையை நாம் ஆற்றிவிடாமல் இருப்பதற்காக எம்மைக் குழப்புவார்கள்.

மக்களை ஒரு குழப்பகரமான நிலையில் வைத்திருக்க வேண்டுமென்பதற்காகவே இளைஞர்களிடத்தில் போதைப் பொருள் பயன்பாடு திட்டமிட்டு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. இப்பொழுது போதைப்பொருள் பாவனையினால் வன்முறைகள் அதிகரித்து வருகின்றனர.

குறிப்பாக தாய் தந்தை பிள்ளைகளை கொலை செய்தல் போதைப் பொருள் பாவனைகளால் கலாச்சார சீரழிவு என பல்வேறு விதத்திலே எங்களுடைய இளம் சமூகம் சீரழிக்கப்படுகின்றது

அதைவிட தற்போது பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இதைப் பலர் எதிர்க்கின்றனர். குறிப்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எதிர்த்திருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி உட்பட தெற்கைச் சேர்ந்த பலரும் எதிர்த்திருக்கின்றார்கள். உலக நாடுகள் பல எதிர்த்திருக்கின்றன இந்த ஆட்சி கொண்டுவரப் போகின்ற பயங்கரவாத தடைச் சட்டம் என்பது மிக மோசமானது

அதன் கீழ் ஒன்று கூடுவதோ அல்லது உரிமைகள் பற்றி பேசுவதற்கோ முடியாது எங்களது உரிமைகள் பற்றி பேச முடியாது இவ்வாறு பெரும் நெருக்கடிகளை தோற்றுவித்து மக்களை ஒரு நெருக்கடி நிலைக்குள் தள்ளி கொடுங்கோல் ஆட்சி மேற்கொள்ளவே இந்த ஆட்சி முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## 2024 ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக ரணில்

### ஐ.தே.க. முக்கியஸ்தர் ரவி தகவல்

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறும். அந்தத் தேர்தலில் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.



தேசிய இணக்கப்பாட்டு ஆட்சியை உருவாக்குவதே ஜனாதிபதி ரணிலின் எதிர்பார்ப்பாக உள்ளது என்றும் அவர் கூறினார். கொழும்பில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகங்கள் முன்னிலையில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (02)

## ரயில் மோதி நேற்றிரவு இரு யானைகள் இறப்பு

தொடருந்து மோதி இரு யானைகள் உயிரிழந்தன. திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி சனிக்கிழமை இரவு பயணித்த தபால்ரயிலால் ஹபரணை பகுதியில் தண்டவாளத்தைக் கடக்க முயன்ற இரு யானைகளை மோதித் தள்ளியது. தொடர்ந்து மோதிய வேகத்தில் யானைகள் இரண்டும் அந்த இடத்திலேயே உயிரிழந்தன என்று ஹபரணை பொலிஸார் தெரிவித் தனர்.

யானைகளில் ஒன்று தொடருந்து இயந்திரத்தின் கீழே சிக்கிக் கொண்டதால் தொடருந்து தடம் புரண்டது. இருப்பினும் பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என தொடருந்துத் திணைக்களம் தெரிவித்தது.

## பெட்டிகளை விட்டு தனியே சென்ற சமுத்திரா தேவி

சமுத்திராதேவி ரயிலின் இயந்திரம் இன்று காலை களுத்துறை வடக்கு பகுதியில் ரயில் பெட்டிகளில் இருந்து தளந்து தனியாகச் சென்றுள்ளது என்று களுத்துறை ரயில்வே பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

களுத்துறை வடக்கு, நாகசந்தி பகுதியில் ரயில் பெட்டிகளில் இருந்து இயந்திரம் தளர்ந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் தனித்து பயணித்துச் சென்று நின்றது எனக் கூறப்படுகின்றது.

இயந்திரத்தை மீண்டும் எடுத்துச் சென்று முடுக்கிவிட்டு சுமார் 15 நிமிடங்கள் தாமதமாகி மீண்டும் மருதானை நோக்கி குறித்த ரயில் சென்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (02)

# அரசியலாளர்களும் அரச பணியாளர்களும் நாட்டுநலனில் அக்கறை காட்டவேண்டும்

## ஈஸ்டர் தின வாழ்த்தில் யாழ் ஆயர் கோரிக்கை



இலங்கை நாட்டு அரசியல்வாதிகளும் அரச தரப்பினரும் அரச பணியாளரும் நாட்டு நலனில் அதிக அக்கறை கொண்டு மக்களினதும் மண்ணினதும் சுபீட்சமான எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு இந்தக் காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என யாழ் ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் உயிர்த்த ஞாயிறு வாழ்த்துச் செய்தி தெரிவித்துள்ளார்.

ஆயரின் வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

உலகெங்கிலும் வாழும் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்கள் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவை 09 ஏப்ரல் 2023 இல் கொண்டாடும் வேளை இப்பெருவிழாவை இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் கொண்டாடும் மக்கள் அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்களை முதலில் தெரிவிக்கிறோம்.

அதேவேளை 14 ஏப்ரல் 2023 இல் தமிழ் – சிங்கள புத்தாண்டை கொண்டாடும் மக்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்கிறோம். இலங்கை நாடு இன்று என்றுமில்லாத ஒரு இக்கட்டான கால கட்டத்தில் உள்ளது.

இலங்கை வாழ் மக்கள் அனைவரும் பல துன்பங்களையும் நெருக்கடிகளையும் அன்றாடம் எதிர் நோக்கி மனம் சோர்ந்து போயுள்ளனர். இருப்பினும் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவுடன் நம்பிக்கையின் ஒளிக்கீற்றுக்கள் தென்படத் தொடங்யுள்ளன என சற்று ஆறுதல்படலாம். இலங்கை நாடு பழைய நிலைக்குத் திரும்ப பல ஆண்டுகளாகும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர் என்பதை நாம் எல்லோரும் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டால் தான் இலங்கை நாடு சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி நகர முடியும் என்று தமிழ் மக்கள் போராடியும் வாதாடியும் நீண்ட காலமாக கேட்டு வந்த உண்மையை இன்று பல சிங்கள தலைவர்களும் சிங்கள மக்களும் ஓரளவு உணரத் தொடங்கியுள்ளனர் போல் தெரிகிறது.

இந்த நிலையைச் சாதகமாக்கி இனியும் காலம் கடத்தாது செயற்பட வேண்டும்.

இலங்கை வாழ் சிங்கள தமிழ் முஸ்லீம் மக்கள் அனைவரும் இன, மத, மொழி மற்றும் வேறுபாடுகளை மறந்து இலங்கைத்தாயின் மக்களாக அன்புடனும் புரிந்துணர்வுடனும் வாழவும் சுபீட்சமான எதிர்காலத்தைக் கட்டி எழுப்பவும் சம்பந்தப்பட்ட அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டுமென இலங்கை மக்கள் அனைவர் பேராலும் அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

எமது இன்றைய அவசர உடனடித் தேவையாக இருப்பது இன்றைய நிலையை வேகமாகச் சரி செய்து நாட்டை மேலும் அழிவு நிலைக்குக் கொண்டு செல்லாது பாதுகாப்பதாகும்.

இலங்கை நாட்டு அரசியல்வாதிகளும் அரச தரப்பினரும் அரச பணியாளரும் இலங்கை நாட்டு நலனில் அதிக அக்கறை கொண்டு மக்களினதும் மண்ணினதும் சுபீட்சமான எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு இக்காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அதிகாரத்திலும் அரச பணிகளிலும் இருப்போர் மட்டுமல்ல இலங்கை வாழ் மக்கள் அனைவரும் இந்த இக்கட்டான நிலையில் இருந்து நாட்டை மீட்டு எடுக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

மின்சார கட்டணம் மிக அதிகரித்துள்ள நிலையில் மின்சாரத்தையும் நீரையும் மிக கவனமாகப் பயன்படுத்துங்கள். இன்னும் வீட்டுத் தோட்டம் ஆரம்பிக்காதவர்கள் உடன் மரக்கறி வகைகளையும் பழவகைகளையும் பயிர் செய்யுங்கள். ஒரு சிறு துண்டு நிலத்தையும் வீணாக விட்டு வைக்காமல் நமது தேவையை நாமே நிறைவு செய்வோம் எனப் பயிரிட்டுப் பயன் பெறுங்கள்.

இலங்கை நாட்டின் இன்றைய மிக இக்கட்டான நிலையில் இறைவன் அனைவருக்கும் நம்பிக்கையைத் தந்து பாதுகாத்து வழிநடத்த இறையாசீர் மிக்க செபங்களையும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். – என்றுள்ளது.

# ஆயர் பேரவை ஆசிச் செய்தி

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடவும், ஜனநாயக உரிமைகளை வென்றெடுத்து மக்களின் துன்பகரமானநிலைமாறிவாழ்க்கைஒளிமயமாக அமைய வேண்டும் என இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்துள்ள இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழா ஆசிச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஆசிச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

'பாஸ்கா பெருவிழா கிறிஸ்தவ நம்பிக்கை யின் மையமாகவும், மறைப்பொருளாக வும் இருப்பதுடன் கத்தோலிக்க திருவழிபாட்டு ஆண்டின் மிக முக்கியமான பெருவிழாவாகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாவம் மற்றும் சாவை வென்று முடிவில்லா இருளிலிருந்து எம்மை மீட்டுக்கொண்டார்.

பாஸ்கா பெருவிழாவின்போது ஆண்டவர் இயேசு கிறிஸ்து மெய்யாகவே உயிர்த்தெழுந்தார் எனவும், அவர் நம் மத்தியில் வாழ்கின்றார் என்பதையும் கொண்டாடி மகிழ்கின்றோம். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து, அனைத்து மக்கள் இனத்தாருக்கும் உயிர்ப்பின் ஒளியை பகிர்ந்தளித்ததுடன், அந்த நம்பிக்கையில் நிலைத்திருக்கவும் செய்துள்ளார். இதுவே, இயேசுகிறிஸ்துவின்மீதுஎமதுநம்பிக்கையை ஆழப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாகும்.

இந்த ஆழமான நம்பிக்கையால், எமது வாழ்வின் சிலுவைகளை சுமந்து அவரோடு பயணிக்கவும் புது வாழ்வு பெறவும் உள்ளார்ந்த வலிமை கிடைக்கிறது.

எமது நாடு முன்னெப்போதும் இல்லாதவாறு பொருளாதார ரீதியில் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்து வரும் இத்தருணத்திலேயே நாம் கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழாவை கொண்டாடுகின்றோம்.

அத்தியாவசிய பொருள்கள் மற்றும் முக் கிய வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளதால், மக்கள் பெரும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

உணவு மற்றும் மருந்துகள் பற்றாக்குறை யால் மக்கள் துன்புற்று வருகிறார்கள். எவ்வாறான கஷ்டங்கள் வந்தாலும், உயிர்த்த ஆண்டவர் எம்மை கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையில் வாழ நாம் ஒவ்வொருவரும் வாழ்வதற்கு அழைக்கப்படுகின்றோம். அதேவேளை, உண்மையான ஜனநாயகம் மற்றும் நீதி எமது நாட்டில் நிலைத்திருக்க வேண்டும் எனவும், மக்கள் அமைதியுடன் வாழ வேண்டும். இந்த துன்பகரமான நிலை மாற்றமடைந்து அமைதி மற்றும் சுயமரியாதையுடன் வாழக்கூடிய நாட்டைக் கட்டி யெழுப்புவதற்கும், உயிர்த்த இயேசு கிறிஸ்துவின் அமைதியும் சமாதானமும் நம் அனைவர் மீதும் இருப்பதற்கு வேண்டியும் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழாவில் வாழ வரம் வேண்டி மன்றாடுவோம். – என குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாமியார் படுகொலை; மருமகன் தலைமறைவு

பெண் ஒருவர் கொடூரமாகத் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பொல்பித்திகம, அலுத்வேகெதர பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கணவன் மற்றும் மருமகனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட குறித்த பெண் மருமகனால் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த பெண் இரத்தக்காயங்களுடன் மீட்கப்பட்டு பொல்பித்திகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொல்பித்திகம, அலுத்வேகெதர பிரதேசத்தில் வசித்து வந்த 59 வயதுடைய பெண்ணே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

பெண்ணின் கணவரும் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (02)

# மட்டு சீயோன் தேவாலயத்திலும் இன்று உயிர்த்த ஞாயிறு ஆராதனை

*மட்டக்களப்பு, பிள்ளையாரடியில் உள்ள சீயோன் தேவாலயத்தில் இன்று உயிர்த்த ஞாயிறு தின சிறப்பு ஆராதனைகள் பொலிஸ் பாதுகாப்போடு இடம்பெற்றன. தேவாலயத்தின் பிரதம போதகர் றொசான் மகேசன் தலைமையில் ஆராதனைகள் நடைபெற்றன.*

*2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையில் உள்ள மூன்று தேவாலயங்களில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலுக்கு மட்டக்களப்பு சீயோன் தேவாலயமும் இலக்காகி, பெருமளவில் சேதமடைந்து, பலர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.*

*அதன் பின்னர், இந்த சீயோன் தேவாலயம் மட்டக்களப்பு, பிள்ளையாரடியில் உள்ள மென்றேசா வீதியில் அமைக்கப்பட்டது. அங்கு இன்று உயிர்த்த ஞாயிறு விசேட வழிபாடுகள் நடைபெற்றன.*

*நல்லாசி உரைகள், நாடும் ஆட்சியும் சிறப்புற வேண்டிய சிறப்பு பிரார்த்தனைகள் இடம்பெற்றன. அதனையடுத்து, போதகரால் உயிர்த்த ஞாயிறு செய்தி வாசிக் கப்பட்டது.*



## அரகலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட சகல குற்றவாளிகளும் தண்டிக்கப்பட வேண்டும். அவர்கள் அனைவரையும் தூக்கிலிட வேண்டும்.

அதேவேளை, ராஜபக்ச அரசுக்கு எதிராகப் போராடிய காலிமுகத்திடல் போராட்டக்காரர்களையும் தூக்கிலிட வேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கு இந்த இரண்டு தீவிரவாதத் தரப்பினர்களே பிரதான காரணகர்த்தாக்கள். இவர்கள் சர்வதேச நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டவர்கள்.

அமைதியான–அழகான இலங்கையை இவர்கள்தான் நாசமாக்கினார்கள். இவர்களை மக்கள் முன்னிலையில் தூக்கிலிட்டுத் தண்டிக்க வேண்டும். அப்போதுதான் நாட்டிலிருந்து தீவிரவாத விக்கிருமிகளை முற்றாக ஒழிக்க முடியும் – என்றார். (02)

## இரு அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டெர்மினல் நிறுவனம் ஆகியவற்றில் 4 ஆயிரத்து 200 பணியாளர்கள் உள்ளனர்.

எனினும், இந்த நிறுவனங்களுக்கு 500 பேரின் தேவை மாத்திரமே உள்ளது.

இதற்கிடையில் சபுகஸ்கந்தவில் உள்ள பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவாக 2021 – 2022 இல் 3 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றும் கணக்காய்வாளரின் அறிக்கை கூறுகின்றது. (02)

## இரு மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேசங்களின் மலைப்பாங்கான மற்றும் சரிவான பிரதேசங்களில் வாழும் மக்கள் மண்சரிவுக்கான அறிகுறிகள் தென்படுமாயின் அது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் பேச்சாளர் அறிவுறுத்தியுள்ளார். (02)

# இந்து ஆலயங்களின் விபரங்கள் அம்பாறை மாவட்டத்தில் திரட்டு









(வி.ரி.சகாதேவராஜா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகம் இணைந்து அம்பாறை மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்கள் தொடர்பான விபரங்களை திரட்டத் தொடங்கியிருக்கின்றது.

திருக்கோவில், ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவிற்கு உட்பட்ட ஆலயங்கள், இந்து மன்றங்கள், கலைஞர்கள், அறநெறிப்பாடசாலை பொறுப்பாசிரியர்கள், இந்து கலைமன்றங்களை உள்ளடக்கி இது தொடர்பில் ஒரு செயலமர்வு நடத்தப்பட்டது. திருக்கோவில் பிரதேசசெயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் வியாழக்கிழமை இடம்பெற்றது. பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலாளர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

மேலும் உதவிப் பிரதேச செயலாளர் க.சதிசேகரன், மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி, திருக்கோவில் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் நிாந்தினி தேவராஜ், மற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் ஆலய தர்மகர்த்தாக்கள், நிர்வாகத்தினர், கலைஞர்கள் மன்றப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆலயங்களின் அடிப்படைத் தகவல்கள், ஆலயத்தின் வரலாற்றுத் தகவல்கள், ஆலய மூர்த்தங்கள் தொடர்பான விவரங்கள், ஆலய உட்கட்டமைப்பு தொடர்பான தகவல்கள், ஆலயத்தின் வழிபாடு தொடர்பான் விடயங்கள், ஆலய நிர்வாகம் தொடர்பான விபரங்கள், ஆலய குருமார் தொடர்பான விவரங்கள்,

ஆலயத்தின் துணை நிறுவனங்களின் தகவல்கள் அதாவது அறநெறிப்பாடசாலை, திருப்பணிச்சபை, அன்னதானசபை, இளைஞர் மன்றங்கள் தொடர்பான விபரங்கள், ஆலயத்தின் நிதி தொடர்பான விவரங்கள், ஆலய பிணக்குகள் தொடர்பான தகவல்கள், ஆலயத்தினால் முன்னேடுக்கப்படும் சேவைகள் தொடர்பான தகவல்கள், கல்விப்பணி, சமூகப்பணி, சமயப்பணி, ஆலய அமைவிடம் தொடர்பான தவல்களை திரட்டப்பட்டன.

# நிறுவனங்களுக்கு அடிமையாகி இயல்பற்ற மக்கள் மீண்டும் சுதந்திரப் போருக்குத் தள்ளப்படலாமாம்

## எச்சரிக்கிறார் முத்து சிவமோகன்

நிறுவனங்களுக்குள் அடிமையாகி நாங்கள் இயல்பற்ற மக்களாக மீளவும் சுதந்திர போர் ஒன்றில் ஈடுபடுமளவிற்குகூட இந்த மக்கள் தள்ளப்படலாம் என இரணைமடு விவசாய சம்மேளனத் தின் செயலாளர் முத்து சிவமோகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் காலபோகத்துக்கான உரம் உள்ளிட்ட உள்ளீடுகள் வழங்குதலை தனியாரிடம் கையளிப்பது தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைக்கு கருத்து தெரிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இரணைடுநீர்பாய்ச்சல்திட்டத்தின் கீழ் சிறுபோக செய்கைக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த வேளையிலே விவசாய அமைச்சர் சில தகவல்களை வெளியிட்டுக்கொண்டிருக்கின்றார். அந்த வகையில், காலபோகத்துக்கான உள்ளீடு விடயங்களை தனியார்மயமாக்கி அவர்கள் ஊடாகவே விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள் உள்ளன எனத் தகவல்களை வெளியிட்டிருக்கின்றார்.

உண்மையில் இந்த சிறுபோக பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான உள்ளீடுகள் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் முழுமையடையாமல், கடந்த வருடம் அறுவடை செய்த நெல்லைக் கூட நியாயமான விலையில் விற்க முடியாமல் தளம்பல் நிலைக்குள் தனியார் நிறுவனங்கள் தவித்தன.

எங்களிடமிருந்து உள்ளீடுகளைக் கொள்வனவு செய்தாலோ அல்லது எங்களுடைய உற்பத்திப் பொருள்களை அவர்கள் கொள்வனவு செய்தாலோ, எந்தவொரு நிதானமற்ற விலை நடைமுறைகளாலும் ஏகபோகதன்மையுடன் விவசாய சமூகத்தை பாதிப்படைய செய்யும் செயற்பாடுகள் கடந்த காலத்திலும் தற்பொழுதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறான சூழலில் இலங்கை தனது கொள்கையாக தனியார் மயப்படுத்தலுக்குள் இறங்கிக்கொண்டிருக்கின்ற இந்த வேளையிலே, முன்னாள் ஜனாதிபதி விவசாயிகள் மற்றும் விவசாயத்தின் மீதான மேலெழுந்தவாரியான தீர்மானங்களை எடுத்ததன் காரணமாக இன்று அவர் பதவியை விட்டு விலகிய நிலையில் இருக்கின்றார்.

இன்று இந்தியாவில் அதானி நிறுவனத்துக்கு எதிராக இந்திய மண்ணிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற போராட்டங்கள் அதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் பற்றி எண்ணுகின்றபொழுது, அதே போன்ற நிலை எமக்கும் ஏற்படுமா என்ற அச்ச சூழ்நிலை எமக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

அதேவேளை, இந்தியாவில் அவ்வாறான போராட்டங்களை நடத்தக்கூடிய சூழலைக்கூட இந்த மண்ணில் நடத்த முடியாத வகையில் சட்ட ஏற்பாடுகளையும் செய்துகொண்டு இலங்கை அரசாங்கம் நகர்ந்துகொண்டிருக்கின்றது.

இவ்வாறான செயற்பாடுகளை நாடாளுமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள் கூட தாங்கள் தங்களுக்கேற்ற கருத்துக்களை முன்வைக்கின்றார்களேயன்றி இந்த மண்ணில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்கள் சார்ந்த மக்களின் வாழ்வியல், சுதந்திரம், எதிர்காலம் பற்றிய சிந்தனைகளோடு கருத்துக்களை பதிவிடுவதாகத் தெரியவில்லை.




தனியார் நிறுவனங்களிடம் எங்களுடைய அனைத்து பொறுப்புக்களையும் அரசாங்கம் ஒப்படைக்குமாக இருந்தால், உள்ளீடுகளை மட்டுமல்ல எங்களுடைய உற்பத்திகளையும் சந்தைப்படுத்துவதற்குக்கூட அவர்களே தீர்மானிப்பார்கள்.

அதுமாத்திரமன்றி, இந்த நாட்டில் எவ்வளவு உற்பத்தி விளைய வேண்டும் என்பதையும் இதே தனியார்தான் நிர்ணயிக்கப்போகின்றார்கள். எங்கள் உற்பத்தியின் விலையை அவர்களே நிர்ணயிக்கப்போகின்றார்கள்.

உற்பத்தியானது நுகர்வோர் சந்தைக்கு செல்கின்றபோது அதனையும் அவர்களே நிர்ணயிக்கப்போகின்றார்கள். இவ்வாறு அனைத்தையும் தனியார்களே நிர்ணயிப்பார்களாக இருந்தால், எதிர்காலத்தில் எமது காணிகளும் நிறுவனங்களிடமே சென்றடையும் சூழல் உருவாகும்.

அவ்வாறு உருவாகின்ற பொழுது, இதே உற்பத்தியார்கள் அந்த நிறுவனங்களிடம் பணியாற்றும் நிலையும் உருவாகும். இது 14ஆம், 15ஆம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் நிறுவனங்களின் எவ்வாறு நாட்டுக்குள் வந்து பின்னாள்களில் அந்த கம்பனிகளின் ஆதிக்கம், 400 ஆண்டுகளுக்கு மேல் எம்மை ஆண்டு அடிமைப்படுத்தி சென்றது போன்ற ஒரு சூழலை இதே கம்பனிகள் இதே மண்ணில் ஏற்படுத்தாது என்றும் சிந்திக்க வேண்டும்.

விவசாயம் மாத்திரமல்ல. பல்துறை சார்ந்த தனியார் மயமாக்கல் மூலம் மொத்த நாடுமே நிறுவனங்களுக்கு அல்லது சர்வதேச நிறுவனங்களுக்கு அடிமையாகி இயல்பற்ற மக்களாக மீளவும் சுதந்திர போர் ஒன்றில் ஈடுபடுமளவிற்குகூட இந்த மக்கள் தள்ளப்படலாம். இந்த தனியார் மயமாக்கலை மிக மிக நிதானமாக இந்த அரசாங்கம் கையாளாவிட்டால் எதிர்காலத்தில் இந்த நாட்டின் மொத்த மக்களுடைய வாழ்வும் கேள்விக்குறியாக மாறும்.

இந்த தனியார்மயமாக்கல் என்ற விடயத்தில் அரசாங்கம் , அரசாங்கம் சார்ந்த அதிகாரிகளும், துறைசார் நிபுனர்கள், அரசியல்வாதிகள் அனைவரும் ஆழமாக சிந்தித்து செயற்பட வேண்டும். அனுபவிக்கும்போதுதான் இதன் சாதக பாதக நிலை தொடர்பில் திடகாத்திரமாகக் கூற முடியும்.

இருந்தபோதிலும் நான் முன்கூட்டியே கூறியமை போன்று, அதாணி கம்பனிக்கு எதிராக இந்தியாவில் எழுந்த விவசாயிகளின் எழுச்சி இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற அவல நிலைமையையும் அந்த சட்டத்தை மாற்றியமைக்குமாறு மக்கள் முன்வைக்கின்ற கோரிக்கையையும் எதிர்காலத்தில் இங்கும் நடைபெறாதிருக்க முடியாது எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.





# மாணவி உயிரிழப்பு; ஜப்பான் விளக்கம்

ஜப்பானில் தடுப்புக் காவலில் உயிரிழந்த இலங்கைப் பெண்ணின் மரணம் தொடர்பில் ஜப்பான் அரசாங்கம் நேற்று (சனிக்கிழமை) விளக்கமளித்துள்ளது.

ஜப்பானில் உள்ள தடுப்பு முகாமில் உரிய சிகிச்சை அளிக்காமல் உயிரிழந்த விஷ்மா சந்தமாலியின் மரணம் தொடர்பான சிசிரிவி காட்சிகள் மாற்றியமைக்கப்பட்டு அனுமதியின்றி ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டதாக ஜப்பான் நீதி அமைச்சர் கென் சைட்டோ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ஜப்பானிய அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார் என ஜப்பானிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையரான ரத்நாயக்கலியனகே விஷ்மா சந்தமாலி (வயது 33) ஒரு மாணவியாக 2017இல் ஜப்பானுக்கு சென்றார்.

இந்நிலையில் அவர் விசா நிபந்தனைகளுக்கு முரணாக தங்கியதால் கடந்த 2020 ஆம் ஆண்டு ஓகஸ்டில் குடிவரவு பணியகத்தில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டார்.

அங்கு வாந்தி மற்றும் வயிற்று வலி உள்ளிட்ட உடல்நலக்குறைவால் அவதியுற்ற அவர் 2021 மார்ச் 6ஆம் திகதி உயிரிழந்தார்.

கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாகோயா பிராந்திய குடிவரவு சேவைகள் பணியகத்தில் விஷ்மா சந்தமாலி தடுத்து வைக்கப்பட்டிருந்த போது பாதுகாப்பு கமெராவில் பதிவான 5 மணிநேர காட்சிகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளன.

அந்த காட்சிகள் 7 நிமிட காணொளியாக சுருக்கி, டோக்கியோவில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பகிரங்கமாக காட்டப்பட்டுள்ளது.

விஷ்மா இறப்பதற்கு இரண்டு வாரங்களுக்குள் எடுக்கப்பட்ட காட்சிகளின் ஒரு பகுதி, அவர் கட்டிலில் படுத்து இருப்பதையும், தன்னால் அசையவோ சாப்பிடவோ முடியவில்லை என்று கூறிய பிறகு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும்படி அவர் அதிகாரிகளிடம் கெஞ்சுவதையும் காட்டுகிறது.

அவள் இறந்த நாளின் மற்றொரு காட்சியில், ஓர் அதிகாரி விஷ்மாவின் விரல் நுனியில் குளிர்ச்சியாக இருப்பதாக இண்டர்கொம் மூலம் அறிவித்த பிறகு, பதிலளிக்காத விஷ்மாவை எழுப்ப முயற்சிக்கும் காட்சிகள் பதிவாகியுள்ளன.

இவ்வாறு வெளியிடப்பட்ட காட்சிகள் மாற்றியமைக்கப்பட்டவை எனவும் அனுமதியின்றி ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டன எனவும் ஜப்பான் அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீதியரசர் நவாஸ் தலைமையிலான ஆணைக்குழு மே 31 வரை நீடிப்பு



இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் விவகாரங்களில் அடுத்தகட்டம் நோக்கிப் பயணிப்பதை இலக்காகக்கொண்டு நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையில் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கான ஆணை எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து ஆராய்தல், புலனாய்வு செய்தல், அறிக்கையிடல் மற்றும் அவசியமான முன்மொழிவுகளைச்செய்தல் ஆகியவற்றுக்காக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையில் ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாந்து, ஓய்வுபெற்ற மாவட்டசெயலாளர் நிமல் அபேசிறி மற்றும் யாழ். நகர முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரடங்கிய ஆணைக்குழுவொன்று கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டது.

அந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டதிலிருந்து கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வரை நாடாளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா, மனோகணேசன், காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்த, இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் தவிசாளர் தாரா விஜேதிலக, கொழும்புப்பல்கலைக்கழகத்தின் சட்டபீட பேராசிரியர் வசந்தா செனெவிரத்ன, முன்னாள் பாதுகாப்புச்செயலாளரும் முன்னாள் ஜனாதிபதி செயலாளரும் இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் உயர்ஸ்தானிகருமான ஒஸ்டின் பெர்னாண்டோ, இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் எஸ்.ஈ.ஸ்கால்க், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாகப் பெருமளவானோர் ஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சியமளித்துள்ளனர். அதுமாத்திரமன்றி ஆணைக்குழுவின் தலைவர் ஏ.எச்.எம்.டி நவாஸ் மற்றும் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் மேற்கொண்டு, அங்கு போரால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்தும் சாட்சியங்களைப் பெற்றுக்கொண்டிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த ஆணை முடிவுக்குவந்த நிலையில், ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை டிசெம்பர் மாதம் சமர்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும் அந்த ஆணைக்குழுவுக்கான ஆணை இவ்வாண்டு ஜனவரி 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டு, பின்னர் ஏப்ரல் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டு, தற்போது எதிர்வரும் மேமாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படவுள்ள நிலையில், எதிர்வரும் மேமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# முந்திரிக்கான கேள்வி இலங்கையில் எகிறல்



புத்தாண்டுகாலத்தை முன்னிட்டு முந்திரிக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக முந்திரி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தற்போது முந்திரிக்கு அதிக கேள்வி நிலவுவதால் தேவைக்கேற்ப அதன் கொள்ளளவை வழங்க முடியாத நிலை இருப்பதாக முந்திரி கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நாள்களில் உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட விற்பனை நிலையங்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு மெற்றிக் தொன் முந்திரி தேவை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தனியார் விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ முந்திரி 4000 - 5000 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் முந்திரி கூட்டுத்தாபனத்தால் ஒரு கிலோ முந்திரி 3000 முதல் 3500 ரூபா வரை விற்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சில பகுதிகளில் உடைந்த முந்திரி துகள்களை, பல வகையான பசைகளை பயன்படுத்தி ஒட்டப்பட்டு, முழு முந்திரியாக விற்பனை செய்வதால், உயர்ரக முந்திரி விற்பனை வீழ்ச்சி அடைவதாக முந்திரி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# பேசாலை உணவக கறியில் பூரான்

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பேசாலை கிராமத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் கொள்வனவு செய்யப்பட்ட உணவில் பூரான் காணப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த விடயம் சுகாதார துறை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

முறைப்பாடு தொடர்பில் விரைந்து செயல்பட்ட மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொது சுகாதார பரிசோதகர்கள் சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக உணவகத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.


இதனையடுத்து உணவுகள் அனைத்தும் அழிக்கப்பட்டதுடன் கடை உரிமையாளர் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளார்.

மேலும், குறித்த சமையலறையை உடனடியாக திருத்தி அமைப்பதற்குரிய வழிகாட்டலும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அடிப்படை மாற்றம் அவசியம்

போதைப் பொருளான ஹெரோயின் கடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு, பிணை அல்லாத விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 5 பேர் மேல் மாகாண மேல் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர். 2019 சித்திரை மாதம் திருகோணமலைக் கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் பயணித்த படகில் இருந்து 196.98 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டிருந்தது. அப்போது இதுவொரு பெரும் செய்தியாக ஊடகங்களை ஆக்கிரமித்திருந்தன. ஆனால், சந்தேகநபர்கள் ஐவருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று தெரிவித்த மேல் நீதிமன்றம் அவர்கள் ஐவரையும் விடுதலை செய்துவிட்டது.

இந்த வழக்கில் விசாரணைகள் நடத்தப்பட்ட விதம் குறித்து நீதிபதிகள் பெரிதும் கவலை தெரிவித்துள்ளனர். காவல்துறையினரின் அறிக்கைகள் முரண்பாடாக உள்ளன என்று அவர்கள் கூறியுள்ளனர். ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியாத நிலையில், நீதிபதிகளுக்கு அவரை விடுவிப்பதைத் தவிர வேறு வழியில்லை. குற்றவாளிகளை நிரூபிப்பதற்கான ஆதாரங்களைச் சரியாகத் திரட்டி முன்வைக்கவேண்டிய முழுச் சுமையும் வழக்குத் தொடுப்பாளரிடம் [காவல்துறையிடம்] உள்ளது. இதில் ஏற்படும் பின்னடைவுகளால், தோல்விகளால் பெரும் சமூகக் குற்றவாளிகள் தப்பிப்பது இது முதல் தடவையல்ல.

போதைப் பொருள் சமூகத்தைச் சீரழிக்கின்றது. மாணவர்களின் கல்வியைப் பாழாக்குகின்றது. குடும்பங்களைச் சீரழிக்கின்றது. தொழிலாளர்களைப் பலவீனமாக்குகிறது. பாலியல் சீரழிவுகளுக்கான பெரும் காரணமாக இருக்கின்றது. எதிர்காலத் தலைமுறையையே கொன்று குவிக்கின்றது. இவற்றை சமூகத்தின் எல்லாத் தரப்பினரும் ஏற்றுக்கொள்கிறார்கள். போதைப் பொருள் பாவனையை முற்றாக ஒழிக்கவேண்டும் என்கிறார்கள். ஆனால், போதைப் பொருள் முக்கிய புள்ளிகளுக்கு வலைவீசப்படும் போதெல்லாம் அவர்களைக் காப்பாற்றுவதற்கு அரசியல்வாதிகள், ஊழல்புரியும் காவல்துறை அதிகாரிகள், சட்டவாளர் உடையில் உள்ள வஞ்சகர்கள் அவர்களைக் காப்பாற்றுவதற்கு முன்னிற்கிறார்கள்.

பல சமயங்களில் பரிசோதனைக்கு அனுப்பப்படும் போதைப் பொருள் மாதிரிகள் சிதைக்கப்படுகின்றன, சாட்சிகள் அச்சுறுத்தப்படுகின்றனர். விசாரணைகள் சீர்குலைக்கப்படுகின்றன, இதனால் குற்ற வழக்குகள் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன. முழு சட்ட அமைப்பும் சட்டத்தை மீறுபவர்களின், குறிப்பாக பணக்கார குற்றவாளிகளின் நலன்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு இயங்குகின்றமை இந்த நாட்டின் பேரவலம்.

இந்தப் பேரவலம் காரணமாகவே இந்த நாட்டில் குற்றஞ்சாட்டப்படுவோரில் தண்டனை பெறுகின்றவர்கள் விகிதம் 4% முதல் 6% வரையாக இருக்கின்றது,

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டதற்காகவும், சர்வதேச போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு ஒத்து ழைப்பு வழங்கியதற்காகவும் 2020ஆம் ஆண்டு பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்பது லஞ்சமும் ஊழலும் மோசடியும் இங்கு புற்று நோய் போன்று எவ்வளவு தூரம் புரையோடிப்போயுள்ளது என்பதைக் காட்டுகின்றது. கைது செய்யப்பட்ட காவல்துறை அதிகாரிகளிடமிருந்து போதைப்பொருள், சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சில சட்ட அமலாக்க அதிகாரிகள் எவ்வளவு தூரம் தமது பணிகளில் சமரசம் செய்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது.

குற்றச்செயல்களை, குறிப்பாக போதைப்பொருள் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்குத் தங்கள் உயிரைக் கொடுக்கும் பல நல்ல காவலர்கள் உள்ளனர். ஆனால் அவர்களின் பணிகள் எல்லாம் சில புல்லுருவிகளால் வீணாய்ப்போகின்றன. போதைப்பொருள் கடத்தலுக்காக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை விடுவிப்பது, போதைப்பொருளைக் கைப்பற்றுவதற்கும் கைது செய்வதற்கும் வாரக் கணக்கில் அல்லது மாதக் கணக்கில் உழைக்கும் அதிகாரிகளுக்கும் படையினனருக்கும் உளத் தளர்ச்சியைத் தரக்கூடியது. அது பேரழிவு தரக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சுதந்திரமாக நடமாடுவதைப் பார்க்கும்போதெல்லாம் அவர்கள் தன்னம்பிக்கையையும் பணி மீதான மதிப்பையும் இழக்கிறார்கள். இந்த துணிச்சலான அதிகாரிகள் மற்றும் ஆட்களின் மனச்சோர்வு, போதைப்பொருளுக்கு எதிரான நாட்டின் போராட்டத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இதனைத் தடுத்து நிறுத்தாத வரையில் போதைப் பொருள் பாதிப்பில் இருந்த இந்த நாட்டை மீட்க முடியாது. எனவே திருகோணமலை வழக்கின் தோல்விக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் குறித்து முறையான விசாரணை நடத்தப்படவேண்டும். அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் போதைப் பொருள் கடத்தலுக்கு ஒத்துழைத்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும். சில காவல்துறையினர் முன்னுக்குப் பின் முரணான வாக்கு–மூலங்களை வழங்குவதற்கு என்ன காரணம் என்பதையும் சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டை அரசுத் தரப்பு நிரூபிக்கத் தவறியது ஏன் என்பதையும் கண்டறிய முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும். உண்மையான நீதியான நேர்மையான விசாரணையின்படி குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவும் வேண்டும் இந்த அடிப்படை மாற்றத்தை, பொறிமுறை மாற்றத்தைக் கொண்டுவராத வரையில் போதைப் பொருளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் முன்னேற்றம் ஏற்படாது.

# ஒழுக்கமும் சட்டமும் இல்லாமல் நாட்டை கட்டியெழுப்ப முடியாது

## ரவி கருணாநாயக்க ‘அட்வைஸ்’



ஒழுக்கமும் சட்டமும் இன்றி ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடிய–ாது என முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். நாட்டை மீளக் கட்டி யெழுப்புவதற்கான இறுதி சந்தர்ப்பம் இதுவெனவும், எனவே மக்கள் இந்த நேரத்தில் மிகவும் புத்திசாலித்தனமாகவும், பொறுப்புடனும் செயற்படவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் மக்களைப் பலப்படுத்துவதற்கும் அன்றி நாட்டை அழிப்பதற்காகவே எதிர்க்கட்சிகளும் சில தொழிற்சங்கங்களும் செயற்படுகின்றன என்றும் குற்றம் சாட்டியுள்ளார். அரசியல் அறியாமை காரணமாகவே பல அரசாங்கம் தோல்வியை சந்திக்கின்றன என்றும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

# ஐ.எம்.எப்பிடம் இருந்து கடனுதவி பெறும் அரசு: வீழ்ச்சியுறும் கல்வி தொடர்பில் கவனம் இல்லை!

## யோசெப் ஸ்டாலின் வருத்தம்



சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி பெறும் நடவடிக்கையில் அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகவும், ஆனால் பல வருடங்களாக வீழ்ச்சியடைந்து வரும் கல்வி தொடர்பில் நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்தவில்லை எனவும் ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்யாமையால் பாடசாலை அமைப்பில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும், இதனால் பாடசாலை மாணவர்களின் கல்வி பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவைவருமாறு –

‘2023 ஆம் ஆண்டு முதலாம் தவணை விடுமுறை ஏப்ரல் 4ஆம் திகதி வழங்கப்பட்டு 17ஆம் திகதி பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டாலும், மாணவர்களுக்குப் பாடப் புத்தகம் மற்றும் சீருடை வழங்கும் பணிகள் இதுவரை நிறைவு செய்–யப்படவில்லை

இந்த ஆண்டு தேவை–யான அளவு பாடப்புத்தகங்கள் அச்சிடப்படவில்லை, பயன்படுத்திய பாடப்புத்தகங்கள் மீண்டும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

சீருடைக்குத் தேவையான துணியில் 75 சதவீதம் சீன அரசிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதோடு சீருடைக்கான முழுத் தேவையும் இதன் ஊடாக பூர்த்தி செய்–யப்படவில்லை. அத்துடன், மக்கள் கடும் பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்து வருகின்ற போதிலும் பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்கு உணவுத் திட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும் போஷாக்கு உணவுத் திட்டம் முறையாக நடைமு–றைப்படுத்தப்படாதமை ஏற்கனவே கடுமையான பிரச்சினையாக மாறியுள்ளது.

கடந்த மார்ச் 31 ஆம் திகதி ஆசிரியர் அதிபர் சங்கத்தின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது கல்வி அமைச்சரிடம் இந்ம விடயங்களை வலியுறுத்தியதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர், ஏப்ரல் 17ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்குமுன்னர் பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடை வழங்கவும், போக்கு உணவுத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமெனவும் அதிகாரிகளுக்கு கோரியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# காரில் சென்றவரை வழிமறித்து இளவாலையில் வாள்வெட்டு



கார் ஒன்றில் பயணித்தவரை மோட்டார் சைக்கிளில் வந்தமூவர்வீதியில்வழிமறித்து வாளால் வெட்டிய சம்பவம் இளவாலையில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நடந்த இந்தத் தாக்குதலில்பண்ணாகம் பகுதியை சேர்ந்த 35 வயது நபர் காயமடைந்தார். அவர் யாழ்.போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். .

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த இளவாலை பொலிஸார் 25 மற்றும் 30 வயதுடைய இருவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கஞ்சாக் குற்றச்சாட்டுகளின் கீழ் இளைஞனும் பெண்ணும் கைது



கஞ்சாபாவனைமற்றும் விற்பனையுடன் தொடர்புடையவர்கள் என்கிற சந்தேகத்தில் அச்சுவேலிப் பொலிஸார் பெண் உட்பட இருவரை கைது செய்–துள்ளனர்.

அச்சுவேலிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவக்கிரி பகுதியில் வைத்து, குப்பிளானைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவர் ஒரு கிராம் கஞ்சாவுடன் இன்று கைது செய்–யப்பட்டார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையின்போது கஞ்சாவினை விற்பனை செய்தார் என்று கூறப்பட்ட 28 வயதுப் பெண்ணொருவர் புன்னாலைக்கட்டுவனில்வைத்து 157 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பொலிஸார் இவர்களைக்கைதுசெய்தனர். சந்தேகநபர்கள் இருவரும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். இது குறித்து மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன..

# இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் தொடர்பில் வழக்குத் தாக்கல்!

இந்தியகடன்வரியின்கீழ்கொள்வனவு செய்யப்படும் மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறன் குறித்து கடுமையான சந்தேகங்கள் எழுந்துள்ளன என வழக்கு தொடரப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இரண்டு இந்திய தனியார் நிறுவனங்களிடமிருந்து மருத்துவப் பொருள்களைக்கொள்வனவுசெய்வதற்கு அமைச்சர்கள் அமைச்சரவை, சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சு மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் ஆகியன எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராகவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொடூரமாக கொல்லப்பட்டார் இரண்டு பிள்ளைகளின் தாய்!

இபலோகம–ஹிரிபிட்டியகமபிரதேசத்தில் வீதியொன்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில்பெண்ணொருவர்உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

45 வயதுடைய பெண் ஒருவர் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை வேலைக்குச் சென்று கொண்டிருந்த போது கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் ஹிரிபிட்டியகம பிரதேசத்திலுள்ள தென்னை தொடர்பான உற்பத்தி தொழிற்சாலையொன்றில் பணிபுரியச் சென்று கொண்டிருந்த வேளையில், இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் ஹிரிபிட்டியகம பிரதேசத்தில் வசிக்கும் ஏ.எம்.சமந்திகா அடிகாரி என்ற 45 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அதே உற்பத்தி தொழிற்சாலையில் பணிபுரியும் இறந்தவரின் மூத்த மகளால் சடலம் கண்டெடுக்கப்பட்டது. சாலையோரம் படுகாயமடைந்த தனது தாயை கண்ட அவர், உடனடியாக அப்பகுதி மக்களின் உதவியுடன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார்.

கணவருடன் ஏற்பட்ட தகராறில், ஒரு மாதத்திற்கு முன்பு, சமந்திகா அதிகாரி தனது இளைய மகளுடன் தனது வீட்டை விட்டு வெளியேறியதால், இறந்தவரின் கணவரே இந்த கொலையை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்தவருக்கும் அவரது கணவருக்கும் கடந்த சில நாள்களாக அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் இப்பலோகம பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் இபாலகோம பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, சமந்திகா அடிகாரியின் கொலை தொடர்பான மேலதிக விசாரணைகளை இப்பலோகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.